இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 177 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 24 – புதன்கிழமை 07 பிப்ரவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 177 : Thiruvalluvar Year - 2055 - Thai 24 - Wednesday 07 February 2024 - Madurai 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டின் கெஸ்டாம்ப் (Gestamp), டால்கோ (Talgo) மற்றும் மேப்ட்ரீ (Mabtree) ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சந்தித்துப் பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், ‘Guidance’ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், ஸ்பெயின் நாட்டின் எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், ‘Guidance’ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, எடிபன் நிறுவனத்தின் உயர் அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

## தன்னிச்சையான - பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி

# நிதி நிர்வாகத்தில் மாநிலங்களின் குரல் வளையை நெரிப்பதா?

## கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராகத் தொடுத்துள்ள வழக்கில் தமிழ்நாடு அரசு துணை நிற்கும்! கேரள முதல்வருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 7 -**

**“மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும்” என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு நேற்று (6.2.2024) எழுதியுள்ள கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல் வளையை நெரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து, மாண்பமை உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளதோடு, இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### தெளிவான ஒருமித்த கருத்து உருவாகியுள்ளது!

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில், ஒன்றிய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது என்றும், மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் இத்தகைய மறைமுகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகியுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றும், இருப்பினும், மாநிலங்கள் கடன் வாங்குவதற்கா ன வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரிவின்படி, ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து, மாநில அரசின் நிதிப் பொறுப்பு மற்றும் வரவுசெலவு மேலாண்மை விதிகளின்படி வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் கருவியாக ஒன்றிய அரசால் மாற்றப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக அரசமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதிய நிதிக் கூட்டாட்சியின் அடிப்படைக்கே மாபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஒன்றிய அரசின் பின்னடைவை ஏற்படுத்தும் போக்கு!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மாநில அரசின் முன்முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் புள்ளி விவரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

முதலாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்ச வரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# தமிழ்நாட்டுக்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பு!

## கண்டித்து மக்களவையில் தி.மு.க. உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு! டி.ஆர்.பாலு – ஆ.இராசா ஆவேசம்!





**புதுடெல்லி, பிப். 7 -**

**தமிழ்நாட்டிற்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பதற்கு கண்டனம் தெரிவித்து நாடாளுமன்ற மக்களவையிலிருந்து “இந்தியா” கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு செய்தன. நிவாரண நிதியை வழங்க மறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கொறடா ஆ.இராசா ஆகியோர் ஆவேசமாகப் பேசினர்.**

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப் பின்போது வானிலை ஆய்வு மையம் உரிய முன்னெச்சரிக்கை தரவில்லை என்று குற்றம் சாட்டினார். இதனால் ரயிலில் ஆயிரக்கணக்கான பயணிகள் தவிக்கும் நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. வெள்ள பாதிப் பின்போது வானிலை மையத்தின் கணிப்புகள் முற்றிலுமாக தோல்வியடைந்தன. சென்னை வானிலை ஆய்வு மையம் மேம்படுத்தப்படாததால் உரிய முன்னெச்சரிக்கையை வழங்கவில்லை. சென்னை வானிலை ஆய்வு மையத்தில் நவீன உபகரணங்கள் இல்லை. உரிய முன்னெச்சரிக்கை இல்லாததால் ஆயிரக்கணக்கான பயணிகள் ரயிலில் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

**டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம்!**

டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது ஒன்றிய அமைச்சர்கள் குறுக்கிட்டு பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம் தெரிவித்தார். டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது, ஒன்றிய இணையமைச்சர்கள் நித்யானந்த் ராய், எல்.முருகன் ஆகியோர் குறுக்கீடு செய்தனர். அதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அவையில் அமளி ஏற்பட்டது. ஆனால் வெள்ள நிவாரணம் தொடர்பாக ஒன்றிய அரசு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

வெள்ள நிவாரண நிதி குறித்து பதிலளிக்காததால் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளும் வெளிநடப்பு செய்தது. தமிழ்நாட்டிற்கு உரிய வெள்ள நிவாரணம் வழங்காததை கண்டித்தும், அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு பதில் அளிக்காததை கண்டித்தும் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். மேலும், காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளி நடப்பு செய்தனர்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை திரும்புகிறார்!

தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க ஸ்பெயின் நாட்டிற்குச் சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (07.02.2024) காலை 8 மணியளவில் விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 07-02-2024



# நிதி அமைச்சருக்கு அவர் கணவரே பதிலளிக்கிறார் - 2

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் எழுதுகிறார்….

* சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செல்லாப் பண நடவடிக்கை கொடுத்த அடியிலிருந்து இன்னும் மீளவில்லை.

* கிராமப் புறங்களின் துன்பம் இடை வெளியின்றித் தொடர்கிறது.

* ஆளும் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் 2022-23ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ஏற்பட்ட 13.5% வளர்ச்சியானது திறமையாகப் பொருளாதாரம் கையாளப்பட்டதன் விளைவென்று பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், உண்மையில் அதற்கு முந்தைய இரு ஆண்டுகளில் பொருளாதாரம் இருந்த படுபாதாளத்திலிருந்து பார்க்கும் போதுதான் 13.5% என்கிற விகிதம் கவர்ச்சியாகத் தோன்றுகிறது என்கிற உண்மையைப் பூசி மெழுகிவிட்டுத்தான் அவர்கள் பெருமை பேசுகிறார்கள்.

* பொருளாதாரம் கொரோனா பெருந் தொற்றுக் காலத்திற்கு முன்பிருந்த நிலைக்கு இன்னமும் திரும்பவில்லை என்கிற உண்மையை நாட்டு மக்கள் பார்த்து விடக் கூடாது என அவர்கள் நினைக்கிறார்கள்.

* பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பேயும் கூட பொருளாதாரத்தின் வேகம் குறைந்திருந்தது என்பதை நாம் மறக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

* தொழில் முனைவோர் நாட்டிற்குள் முதலீடு செய்யத் தயாரில்லை.

* மூலதனம் நாட்டின் எல்லைகளைக் கடந்து இரக்கமில்லாமல் பறந்து கொண்டிருக்கிறது.

* மக்கள் இது போன்று எப்போதும் வாழ்ந்ததில்லை. பாலாறும் தேனாறும் ஓடும் ஒரு பொற்காலத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்று அரசுகள் பிரகடனம் செய்யும்போது நாம் அவற்றின் உள்நோக்கத்தைச் சந்தேகிக்க வேண்டும். இப்படி அறிவிப்பதின் மூலம் அவர்கள் மக்களின் பொதுக் கருத்தை வளைக்க நினைக்கிறார்கள், மோசமான நிர்வாகத்திலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப நாட்டையே இரைச்சலிலும், கண்கவர் காட்சிகளிலும் மூழ்கடிக்கிறார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

* நாம் சுபமான நாட்களில் வாழ்வதாகவும் (அச்சே தின்) தற்போது ஒரு அமிர்த காலத்தில் இருப்பதாகவும் அரசு, குறிப்பாகப் பிரதமரும் அவரின் அதிகார வர்க்க அடிமைகளும், திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். அவர்கள் தம் பெருமையாகச் சொல்லுவதெல்லாம் எவ்வளவு பொய்யானவை, தவறான தோற்றம் தருபவை.

* பான்ச் பிரான், அம்ரித் கால், ஆத்மநிர்பார் பாரத், டிஜிட்டல் இந்தியா, விஸ்வகுரு என முடிவில்லாமல் எழுப்பப்படும் இரைச்சல்களும் கூட நம் தேசிய வாழ்வின் பவித்திரமான ஒவ்வொரு தருணத்தையும் ஒரு மாபெரும் சர்க்கஸாக மாற்றி, சிறுமைப்படுத்தி அவற்றின் உள்ளார்ந்த பொருளை அழிப்பதற்கான முயற்சிதான். இது மோடி ஆட்சியின் ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது. இத்தகைய சர்க்கஸுகள் திரும்பத் திரும்ப நடத்தப்பட்டு, சகஜமாக்கப்பட்டு விட்டதால் நாடு அவற்றுடன் வாழப் பழகிவிட்டது போலவே தோன்றுகிறது.

என்று வரிசையாக வரிசைப்படுத்தி பா.ஜ.க.வின் பொருளாதாரத் தோலை உரித்துக் காட்டி இருக்கிறார் பரகால பிரபாகர்.

**“மோடி ராஜ்ஜியத்தின் நம்ப முடியாத அளவிலான திறமையின்மைதான் இந்தியாவின் பொருளாதாரத் துயரங்களுக்குக் காரணம். தீர்க்கமான சிந்தனையின் அடிப்படையிலான ஒரு கோர்வையான பொருளாதாரத் தத்துவத்தை அது உருவாக்க முடியவில்லை. பொதுத்துறையின் சொத்துக்களை விற்பதே பொருளாதாரச் சீர்திருத்தம் என்கிற எளிய சிந்தனையை அது விற்க முனைகிறது. பொதுத்துறையைத் தொடர்ந்து நடத்துவதற்கான, வலுவான உண்மையான சீர்திருத்தங்கள் செய்வதை அது தவிர்க்கிறது”** என்று குற்றம் சாட்டுகிறார் பரகால பிரபாகர்.

**“ஒரு புறத்தில் சந்தை சார்ந்த நவதாராளமயக் கொள்கையைக் கிளிப்பிள்ளை போலத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தப் ‘புதிய இந்தியா’, மறுபுறத்தில் தேசத்தின் சொத்துக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனக்கு வேண்டிய தொழில்துறை நண்பர்களுக்கு மலிவான விலைக்குக் கொடுத்து வருகிறது. சமீபத்தில் வெளியான அதிரடியான ஹிண்டென்பெர்க் அறிக்கை கவுதம் அதானி குழுமத்திற்கு மோடி அரசிடம் இருக்கும் நெருக்கமான உறவு குறித்து சில முக்கியமான கேள்விகளை எழுப்பியிருக்கிறது. இதனால் எழுந்த சந்தேகக் காற்றை அரசு தூய்மை செய்யுமா என இன்னமும் நாடு காத்திருக்கிறது. ஒரு முறையான, ஒழுங்கு படுத்தப்பட்ட பொருளாதாரப் பார்வையும், திறமையான பொருளாதார ஆலோசகர்களும் இந்த அரசுக்கு இல்லாத காரணத்தினால் ‘புதிய இந்தியா’ சூனியக்காரப் பொருளாதார நிபுணர்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது”** என்று குற்றம் சாட்டி இருக்கிறார் அவர்.

**“பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பிருந்த அடிமட்ட வளர்ச்சி அளவைக் கூட இது வரை பொருளாதாரம் எட்டவில்லை. பொருளாதாரத்தை இப்படிச் சின்னாபின்னமாக்கிய ஆளும்கட்சி அரசியல் தகிடுதத்தத்தில் தான் ஒரு மேதை என்பதை நிரூபித்து விட்டது”** என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் சொல்வது இப்போது வெளியிடப்பட்டு இருக்கும் நிதிநிலை அறிக்கையையும் சேர்த்துத்தான் என்றே பொருள் கொள்ள வேண்டும். ●●

## கும்முடிப்பூண்டியில் பேறறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

கும்முடிப்பூண்டி, பிப். 7 – பேரறிஞர் அண்ணாவின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு கும்முடிப்பூண்டி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலைக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இதில் மு.மணிபாலன், எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகர், இரா.அறிவழகன், ந.பரிமளம், கே.வி. லோகேஷ், மு. பாஸ்கரன், ஜி.மணி, கே.ஆறுமுகம், எம்.கேசவன், இரா. ரமேஷ், அப்துல்கரீம், அர்ஜுனன், குப்பன், எஸ்.எம்.திருநாவுக்கரசு, ஆர்.எஸ்.காளத்தி, மணிமேகலை சுகு, வெங்கடேசன், ஆர்.எம்.ரவி, ரவி சந்திரன், கருணாகரன், தமிழ் சாதிக் கே.வி.நாகராஜ், பழகடை செல்வம், அராப்பு பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டின் கெஸ்டாம்ப் *(Gestamp)*, டால்கோ *(Talgo)* மற்றும் மேப்ட்ரி *(Mabtree)* ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சந்தித்துப் பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், *‘Guidance’* நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உள்ளனர்.

### ஸ்பெயின் – தொழிற்துறையின் ஜாம்பவான் எடிபன் நிறுவனம்

# தமிழ்நாட்டில் ரூ.540 கோடி முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்), பிப். 7 - எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான ஒப்பந்தம் மற்றும் ஸ்பெயின் நாட்டின் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் சந்திப்பு மகிழ்ச்சிக்குரியது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

அது வருமாறு:-

ஸ்பெயினின் தொழில்துறை ஜாம்பவான்களான கெஸ்டாம்ப், டால்கோ மற்றும் எடிபன் ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மேற்கொண்டேன்.

இந்தியாவின் உற்பத்தி மையமான தமிழ்நாட்டில் உள்ள எல்லையற்ற வாய்ப்புகளை அவர்களுக்கு எடுத்துரைத்தேன். எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான ஒப்பந்தம் மேற்கொண்டது மகிழ்ச்சிக்குரியது.

நோய்த்தடுப்பு சிகிச்சையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள Mabtree என்ற நிறுவனத்துடன் பயனுள்ள கலந்துரையாடலையும் மேற்கொண்டேன். இது ஸ்பெயின் நாட்டின் வெற்றிகரமான பயணத்தின் இறுதிக் கட்டம் ஆகும்.

இதுபோன்ற பலனளிக்கும் முடிவுகளுடன், நான் நாளை ஸ்பெயினிலிருந்து புறப்படுகிறேன், சில நாட்களுக்குப் பிறகு உங்கள் அனைவரையும் பார்க்க ஆவலுடன் இருக்கிறேன், இது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளிக்கிறது. அதே போன்று, ஸ்பெயினில் உள்ள தமிழ் சமூகம் எனக்குக் காட்டிய அன்பான வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கும் நன்றியுள்ளவனாவேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கேரள அமைச்சரவை

# புதுடெல்லியில் 8ஆம் தேதி நடத்தும் போராட்டத்தில் தி.மு.க. பங்கேற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மலையாள மொழியில் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 7 - கேரள அமைச்சரவை புதுடெல்லியில் 8ஆம் தேதி நடத்தும் போராட்டத்தில் தி.மு.க.வும் பங்கேற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அவரது சமூக வலைதளப் பதிவு மலையாள மொழியிலும் வெளியாகி உள்ளது.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு: -

“മാണ്புமிகு” — “மாண்புமிகு தோழர் @PinarayiVijayan அவர்கள் எழுதிய கடிதத்தை, கேரள மாநில தொழிற்துறை அமைச்சர் மாண்புமிகு @PRajeevOfficial அவர்கள் என்னிடம் அளித்திருந்தார்.

அதற்கான பதில் கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசின் நடவடிக்கைகளுக்குத் தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும் என்று உறுதியளித்திருக்கிறேன்.

மேலும், நாளை மறுநாள் (பிப்ரவரி 8) தலைநகர் தில்லியில் கேரள அமைச்சரவை நடத்தவுள்ள போராட்டத்தில், நாடாளுமன்ற வளாகத்தில் கருஞ்சட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தும் தி.மு.க.வும் பங்கேற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்கில் நாம், தோழர் @PinarayiVijayan அவர்கள், கிழக்கில் மரியாதைக்குரிய சகோதரி @MamataOfficial அவர்கள் என இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீது உறுதியான பற்றுதலைக் கொண்டு பேசும் இன்னும் பிற தலைவர்களுடைய குரல்கள்தான் வேறே தவிர; கொள்கை ஒன்றுதான்!

கூட்டுறவுக் கூட்டாட்சியை நிலைநாட்டி, மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் வரை நம் உரிமைக்குரல் ஓயாது!

உயிர்த்தீயாய்ச் சுடர்விடும் மாநில சுயாட்சி முழக்கத்தைப் பாசிச பா.ஜ.க.வால் ஒருபோதும் அணைத்துவிட முடியாது. நிதி, நிருவாகம் உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளிலும் மாநிலங்களுடைய உரிமைகள் நிச்சயம் நிலைநாட்டப்படும். அதற்கான காலம் கனிந்துகொண்டு இருக்கிறது!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

“ബഹുമാനപ്പെട്ട കേരള മു
എഴുതിയ കത്ത് ബഹുമാന
@PRajeevOfficial എനിക്ക് കൈമ

സംസ്ഥാന സർക്കാരു
#UnionGovernment ഇടപെടുന്നതി
കേരള സർക്കാരിൻ്റെ ഹർ
പിന്തുണ നൽകുമെന്ന് അ
കത്തിൽ ഞാൻ ഉറപ്പ് കൊടു

കൂടാതെ, ബഹുമാനപ്പെട്ട #
തീയതി ഡൽഹിയിൽ സം
#DMK പങ്കെടുക്കും.

തെക്കേ ഇന്ത്യയില് ഞങ്ങളും
ബഹുമാനപ്പെട്ട സഹോദരി
ഭരണഘടനയിൽ അചഞ്ചല
എല്ലാവരും ഇന്ന് സംസ്ഥാന
നിൽക്കുന്നു.



வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் ஒன்றியம் வடுகந்தாங்கல் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய குழு தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் சீதாராமன், ஜெயா முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பா.ஜ.க.விற்கு ஆதரவாக சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய

# தேர்தல் அதிகாரிக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

## “ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி படுகொலை செய்துவிட்டார்”

புதுடெல்லி, பிப்.7-

**சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய தேர்தல் அதிகாரியை உச்சநீதிமன்றம் கடுமையாகக் கண்டித்துள்ளது. “வாக்குச்சீட்டை அவர் திருத்தி இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது” என்று வாய் மொழியாகக் குறிப்பிட்டுள்ளது.**



தலைமை நீதிபதி சந்திர சூட் இதுபற்றி குறிப்பிடுகையில், “இதுதான் தேர்தல் நடத்தும் லட்சணமா? ஜனநாயகக் கேலிக் கூத்து; ஜனநாயகப் படுகொலையே நடந்துள்ளது. அந்த மனிதர் (தேர்தல் அதிகாரி) மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் - ஆம் ஆத்மி கட்சி கவுன்சிலர்களின் வாக்குகள் செல்லாது என்று அறிவித்து விட்டு, வெறும் 8 வாக்குகள் பெற்ற பா.ஜ.க. வேட்பாளர் சண்டிகர் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றார் என்று அந்தத் தேர்தல் அதிகாரி வெளியிட்ட அறிவிப்பு தொடர்பான வீடியோவை முழுவதுமாக பார்த்த பின், தலைமை நீதிபதி சந்திர சூட் மேற்கண்டவாறு கடுமையாகத் தெரிவித்தார்.

“தேர்தல் அதிகாரியின் நடத்தையைப் பார்த்து இந்த நீதிமன்றமே திகைத்துப் போனது. அவர் ஏன் காமிராவையே பார்க்கிறார்? தப்பியோடுபவர் போல் திகைத்துக் காண்கிறார். வாக்குச் சீட்டில் அவர் திருத்தம் செய்வது நன்கு தெரிகிறது. ஒரு தேர்தல் அதிகாரியாக இருந்து கொண்டு இப்படியா நடந்துகொள்வது?

காமிராவையே பார்த்துக்கொண்டு திரும்பத் திரும்ப வாக்குச் சீட்டில் திருத்தம் செய்கிறார். வாக்குச் சீட்டின் அடியே குறுக்காக கோடு உள்ளதை அங்குள்ள ட்ரேவில் போட்டு விடுகிறார். பின்னர் அதை எடுத்து மேல்புறத்தில் கோடு போட்டு அந்த வாக்குச் சீட்டை செல்லாததாக்கி விட்டு, மீண்டும் காமிராவை பார்க்கிறார்.

அவருக்குச் சொல்லுங்கள். அவரை உச்சநீதிமன்றம் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தேர்தல் நடைமுறையின் புனிதம்தான் இந்த நாட்டின் நிலையான சக்தியாகும்” என்று மேலும் தலைமை நீதிபதி தெரிவித்தார்.

சண்டிகர் மேயர் தேர்தலை நடத்திய தேர்தல் அதிகாரி, வருகிற 19ஆம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, தான் அவ்வாறு நடந்து கொண்டதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களின் தலைநகரான யூனியன் பிரதேசம் சண்டிகரின் மேயர் தேர்தல் கடந்த இரு தினங்களுக்கு முன்னதாக நடந்தது. அதில் பா.ஜ. மேயர் வேட்பாளர் மனோஜ் சோங்கர் 16 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட நிலையில், ஆம் ஆத்மி - காங்கிரஸ் கூட்டணியின் மேயர் வேட்பாளர் 12 வாக்குகள் பெற்றதாகவும், எட்டு வாக்குகள் செல்லாது என தேர்தல் அலுவலர் அறிவித்தார்.

### தேர்தல் அதிகாரி பதிலளிக்க உத்தரவு!

திட்டமிட்டு வாக்குச்சீட்டுகளில் பேனாவால் சில திருத்தம் செய்து வாக்குச்சீட்டு செல்லாது என தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவித்ததாக கூறி அதற்கான வீடியோவை காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் வெளியிட்டன. இதைத்தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக ஆம் ஆத்மி, காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் குல்தீப் குமார் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பஞ்சாப், அரியானா உயர்நீதிமன்றம், தேர்தல் அதிகாரி பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்கண்ட விவகாரத்தில் ஆம் ஆத்மி கவுன்சிலர் குல்தீப் குமார் (தோற்கடிக்கப்பட்ட மேயர் வேட்பாளர்) தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு மனுவானது உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட், நீதிபதிகள் ஜே.பி.பரிதிவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அமர்வில் திங்களன்று விசாரணைக்கு வந்தது.

### அதிகார துஷ்பிரயோகம்!

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி,” சண்டிகர் மேயர் தேர்தலில் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகளின் வாக்கு சீட்டுகளை வேண்டுமென்றே செல்லாதவைகளாக்கி அதிகார துஷ்பிரயோகம் செய்து விட்டார். வேண்டுமென்ற பாகுபாடுடன், தேர்தல் அதிகாரி செயல்பட்டு எட்டு வாக்குச் சீட்டுகளில் திருத்தம் செய்துவிட்டார். அதனால் நடத்தி முடிக்கப்பட்டுள்ள சண்டிகர் மேயர் தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, “இந்த விவகாரத்தில் ஆதாரமாக காண்பிக்கப்படும் வீடியோக்கள் ஒருவருக்கு மட்டும் சாதகமான நிலையில் காண்பிக்கப்படுகிறது. முழு பதிவுகளையும் பார்த்த பின்னர் தான் முடிவெடுக்க முடியும். அதனால் இந்த விவகாரத்தில் ஒரு விரிவான பார்வை தேவைப்படுகிறது என தெரிவித்தார்.

### இடைக்கால தடை!

அப்போது சரமாரி கேள்வியெழுப்பிய தலைமை நீதிபதி, “சண்டிகர் மேயர் தேர்தல் விவகாரத்தில் முழு வீடியோ பதிவுகளையும் வாக்கு சீட்டுகளையும் பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். இதில் தற்போது வீடியோ ஆதாரங்களை வைத்து இருக்கும் சண்டிகர் துணை ஆணையர் அனைத்து விவரங்களையும் திங்கள் மாலை 5மணிக்குள் உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரலிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும். மேலும் இந்த விவகாரத்தில் எதிர்மனுதாரர் பதிலளிக்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பிக்கிறது” என உத்தரவிட்ட தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், 7ம் தேதி (இன்று) நடைபெற இருந்த சண்டிகர் மாநகராட்சி கூட்டத்துக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400க்கும் மேற்பட்ட தொகுதிகளில் ஜெயிக்கும். இதில் பாரதிய ஜனதா மட்டும் 370 தொகுதிகளில் வெற்றி பெறும் எனப் பிரதமர் மோடி பேசியுள்ளாரே; பார்த்தியா அண்ணே!

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பார்த்தேன்! சண்டிகர் மேயர் தேர்தலில் 'ஜனநாயகப் படுகொலை நடந்துள்ளது' என உச்சநீதி மன்றமே வேதனைப்படும் அளவு ஜனநாயகத்தை கண்ணுக்கெதிரே பட்டப் பகலிலேயே கொலை செய்தவர்களாயிற்றே பாரதிய ஜனதா கட்சியினர். அதுபோல நாடாளு மன்றத் தேர்தலிலும் தில்லு முல்லு செய்ய ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறார்களோ என்னவோ?**

அரியலூர் மாவட்டத்தில்

# புதிய பேருந்து வழித்தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், பிப்.7-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம், மெய்யனூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப செந்துறை முதல் சேலம் வரை புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி சேலம் திட்டக்குடி (வழி) ஆத்தூர், வேப்பூர், தொழுதூர் வரை பேருந்து இயக்கப்பட்டு வந்தது. தற்போது அரசுப்பேருந்து தடம் எண் 132யுஇ திட்டக்குடி செந்துறை (வழி) வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம் பிரிவு (வழித்தடம் நீளம் 24 கி.மீ) நீட்டிப்பு செய்யப்பட்டு இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து சேலத்திலிருந்து செந்துறைக்கு காலை 4.26 மணிக்கு புறப்படும். அதேபோன்று காலை 9.35 மணிக்கு செந்துறையிலிருந்து ஆத்தூருக்கு புறப்படும். இந்த புறநகர் பேருந்து வழித்தடம் நீட்டிப்பால் வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம் பிரிவு பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஊர் பொதுமக்களுக்கு சேலத்திலிருந்து செந்துறைக்கு நேரடி பேருந்து வசதி கிடைக்கப்பெற்று பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேலாண் இயக்குநர் (சேலம்) பொன்முடி, துணை மேலாளர் வணிகம் சேலம் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், அன்பழகன், சேகர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், தொழிற் சங்கத்தினர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆனைக்குட்டம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், இலங்கை தமிழர்களுக்கு ரூ.5.88 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 117 குடியிருப்புகளுக்கான கல்வெட்டினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் திறந்து வைத்தார். உடன் துணை மேயர் விக்னேஷ், பிரியா காளிராஜன், சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன், சிவகாசி ஒன்றிய செயலாளர் விவேகன்ராஜ் முத்து லட்சுமி ஆகியோர் இருந்தனர்.

# நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு - ஆ.இராசா ஆவேசம்!

### கருஞ்சட்டை அணிந்து போராட்டம்!

தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யாதது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது ஒன்றிய அரசு பதிலளிக்கவில்லை என நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றம்சாட்டினார். டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒன்றிய அரசை கண்டித்து நாளை (8ம் தேதி) நாடாளுமன்றத்தில் உள்ள காந்தி சிலை முன், கருஞ்சட்டை அணிந்து போராட்டம் நடத்தப்படும் என்றும் இந்தியா கூட்டணியை கண்டு பா.ஜ.க. பயந்துள்ளது என்றும் கூறினார்.

### ஆ.இராசா குற்றச்சாட்டு

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய தி.மு.க. கொறடா ஆ.இராசா எம்.பி., தமிழ்நாட்டுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுவதாக குற்றஞ்சாட்டினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமரை சந்தித்து 37ஆயிரம் கோடி ரூபாய் நிவாரணம் கேட்டபோதும், ஒன்றிய அரசு ஒரு பைசாகூட வழங்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டி னார். தமிழ்நாடு அனைத்துக் கட்சிக் குழு, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து வலியுறுத்திய போதும், இதுவரை வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டிய ஆ.இராசா, தமிழ்நாட்டை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்று குற்றஞ்சாட்டினார்.

முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு அரசு ரூ.37 ஆயிரம் கோடி வெள்ள நிவாரணம் கோரியது. தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமரை சந்தித்து வலியுறுத்தினார். தமிழ்நாட்டு அனைத்துக் கட்சிக் குழு உள்துறை அமைச்சரை சந்தித்தது.

ஆனால் தமிழ்நாடு அரசு கோரிய ரூ.37,000 கோடி வெள்ள நிவாரணம் எப்போது வழங்கப்படும், எவ்வளவுத் தொகை வழங்கப்படும் என அமைச்சரின் பதிலில் உறுதி அளிக்கவில்லை. ஒன்றிய அரசின் குழு தமிழ்நாட்டில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசும் அறிக்கை அளித்துள்ளது. இரண்டு அறிக்கையும் ஒன்றிய அரசிடம் உள்ளது. உள்துறை அமைச்சர் அளித்த உத்தரவாதத்தின்படி, வெள்ள நிவாரணத் தொகை எப்போது விடுவிக்கப்படும்? அந்த வெள்ள நிவாரணத் தொகை பா.ஜ.க. ஆளும் குஜராத் போன்ற மாநிலங்களுக்கு வழங்கியது போல இருக்குமா?

மாநில பேரிடர் நிதி என்பது வேறு, தேசிய பேரிடர் நிதி என்பது வேறு என்பதை சுட்டிக்காட்டிய ஆ.இராசா எம்.பி. மாநில பேரிடர் மேலாண்மை நிதியை வெள்ள நிவாரண நிதி என்று கூறுவது ஏமாற்றும் செயல் என்று குற்றஞ்சாட்டினார். குஜராத் உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கும் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு பாரபட்சம் காட்டுகிறது என்றும் ஆ.இராசா கடுமையாக விமர்சித்தார். தேசிய பேரிடர் நிவாரண நிதியை அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக வழங்கும் வகையில் புதிய விதி முறைகளை வகுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் ஒன்றிய அரசின் செயல்பாடு மாற்றாந்தாய் மனப்பான்மையில் உள்ளது. மாநில பேரிடர் நிதி என்பது வேறு, தேசிய பேரிடர் நிதி என்பது வேறு. இரண்டையும் ஒன்றிய அமைச்சர் குழப்பிக் கொள்கிறார்.15வது நிதி ஆணையத்தின் கீழ், ஆண்டு தோறும் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் பேரிடர் மேலாண்மை நிதியை வெள்ள நிவாரண நிதியாக கூறுவது ஏற்புடையதல்ல என ஆ.இராசா குறிப்பிட்டார்.



கடலூர் மேற்கு மாவட்டம் கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் பெரியகாப்பான்குளம் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார். உடன் ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழை பெண்களுக்கான திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் விழா தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, 742 ஏழைப் பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் மற்றும் தலா ரூ.50 ஆயிரம் வழங்கினார். மேலும், கேலோ இந்தியா போட்டிகளில் வெற்றி பெற்ற தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த அலிஸ் தேவ பிரசன்னா 1.66 மீட்டர் உயரம் தாண்டி தங்கப் பதக்கமும், வசந்த குமார் பளுதூக்குதலில் வெள்ளிப் பதக்கமும், ரேஷ்மா டென்னிஸ் விளையாட்டில் வெள்ளிப் பதக்கமும் வென்ற வீரர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பியைச் சந்தித்து, பதக்கத்தைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கேரள முதல்வருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

நிர்ணயித்துள்ளது என்றும், இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

**மாநிலங்கள் பாதிக்க வாய்ப்புள்ளது!**

இரண்டாவதாக, மின் துறை சீரமைப்புகளுக்காக கூடுதல் கடன் பெறுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளின்படி, மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOMs) மொத்த இழப்புக்கு நிதியளிக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையால், நடப்பாண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.17,111 கோடி வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது என்றும், இது இந்த ஆண்டு மாநிலத்தின் நிதி வாய்ப்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது என்றும், எதிர்காலத்திலும் மாநிலங்களை பாதிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்றாவதாக, ஒன்றிய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2 ஆம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே காலதாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான 33,594 கோடி ரூபாய் முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் மூலம் மாநிலங்களின் நிதித் தன்னாட்சி கடுமையாக குறைக்கப்பட்டுள்ள நேரத்தில். இத்தகைய பாரபட்சமான மற்றும் அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முன்னெடுத்து வருகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது என்றும், இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**மாநில அரசுகள் எதிர்க்க வேண்டும்!**

மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே ஒன்றிய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒருமித்த கருத்துடைய முற்போக்கான மாநில அரசுகள் இதனை எதிர்க்க வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதில் கேரள அரசின் உறுதிப்பாட்டை தான் முழுமையாக ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு ஒத்துழைப்பை கேரள அரசுக்கு வழங்கத் தயாராக உள்ளது என்றும், இந்த முக்கியமான சவாலை எதிர்கொள்ள கேரள அரசின் நடவடிக்கைகளோடு, தமிழ்நாடு அரசின் முயற்சிகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டுமென்று தனது கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டத்தில்

## நெல்லை மத்திய மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை,பிப்.7-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில உரிமைகளை காத்திட கூட்டாட்சி கோட்பாட்டை சிதைக்கும் வகையில் ஆளுநர்கள் மூலம் ஆட்சி செய்ய துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாளை (08.02.24 வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் பாளை லூர்து நாதன் சிலை அருகில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும். என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது தொடர்பான விவரம் வருமாறு.

நம் கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி நாளை (8 தேதி வியாழக்கிழமை) மாலையில் பாளை லூர்துநாதன் சிலை அருகில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது திராவிட முன்னேற்றக் கழக, தலைமை கழக, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக், கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள்,கழக சார்பு அணி நிர்வாகிகள், கழக உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாநில உரிமைகள் காத்திட பெரியோர், ஆன்றோர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி அடையச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.பி.எம். மைதீன்கான் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (03.02.2024) அன்று மீனவர் நலன் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் தலைமையேற்று அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் ப. விஷ்ணு சந்திரன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் பங்கேற்றார்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

### ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம் (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024<br>பிப்ரவரி - 7 | மதுரை | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர்,<br>சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு,<br>திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| " பிப்ரவரி - 9<br>பிற்பகல் | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு,<br>தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| " பிப்ரவரி - 10<br>காலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு,<br>திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு,கரூர் |
| மாலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு,<br>கோவை மாநகர், நீலகிரி |
| " பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு,<br>சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு,<br>நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு<br>கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய,<br>தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை,<br>மயிலாடுதுறை, திருச்சி வடக்கு,<br>திருச்சி தெற்கு, திருச்சி மத்திய,<br>புதுக்கோட்டை வடக்கு,<br>புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு,<br>கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர்,<br>பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18<br>காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை,<br>திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு,<br>திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி<br>21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு,<br>சென்னை கிழக்கு, சென்னை மேற்கு,<br>சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு,<br>காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு,<br>திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு,<br>திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## வெள்ளப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டதில் சென்னை மாநகராட்சிக்கு முக்கிய பங்கு உண்டு!

# சென்னைக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் முதல்வர்!

## சென்னை மாநகராட்சியின் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, பிப்.7 –

**வெள்ளப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டதில் சென்னை மாநகராட்சிக்கு முக்கிய பங்கு உண்டு என்றும், சென்னைக்குத் தேவையான திட்டங்களை, நம் திராவிட மாடல் அரசு நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார் என்றும் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**



சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் நேற்று முன்தினம் (05.02.2024) ரூ.11.98 கோடி மதிப்பிலான முடிவுற்ற 13 திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.152.67 கோடி மதிப்பிலான 52 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் வாரியம் சார்பில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் முடிவற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

“இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைக்கு சென்னை இந்தியாவின் முன்னணி மாநகரம் மட்டுமல்ல, உலகளவிலும் முன்னணி மாநகரமாகத் திகழ்ந்து வருகின்றது. வளர்ச்சி அடைந்து வருகின்றது. அந்தளவிற்கு, சென்னைக்குத் தேவையான திட்டங்களை, நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்.

**சிங்கார சென்னை 2.0!**

மேயராக இருந்து, சிங்கார சென்னையை உருவாக்கிய நம் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு முதலமைச்சராக சிங்கார சென்னை 2.0 திட்டம் மூலமாக சென்னையை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பாக, 12 கோடி ரூபாய் மதிப்பில் முடிவுற்ற 13 திட்டப் பணிகளை இன்று திறந்து வைத்திருக்கின்றோம். அதேபோல் 153 கோடி ரூபாய் மதிப்பிலான திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வேகமாக நகரமயமாகி வருகின்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றது. குறிப்பாக, சென்னை இன்றைக்கு விரிவடைந்துகொண்டே சென்று கொண்டிருக்கிறது. சென்னையின் மக்கள்தொகையும் பெருகிக் கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சிக்கு ஏற்ப நம்முடைய சென்னை மாநகராட்சி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அன்றாடம் மக்களிடம் இருந்து மக்களுக்காகச் சேவை செய்யக்கூடிய ஒரு துறை என்றால், அது நம் நகராட்சி நிர்வாகத் துறைதான். குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால் மாநகராட்சியின் பணிகள் தடைபட்டால், இன்றைக்குச் சென்னையே செயலிழந்து போய்விடும்.

அப்படிப்பட்ட ஒரு முக்கியமான இந்தத் துறையைத் தான் அண்ணன் கே.என்.நேரு அவர்கள் மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுக்கள்.

இன்று சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையில் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது. மக்களுடைய தேவைகள் அனைத்தும் நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகின்றன. அதற்கு இந்த நேரத்தில் மாநகராட்சிக்கு, சென்னை மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, நமது முதலமைச்சரின் கனவுத் திட்டம், ``சிங்கார சென்னை2.0” திட்டத்திற்காக ரூபாய் 500 கோடியை ஒதுக்கி உள்ளார்கள். அதன் மூலம் சென்னையின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. மேம்பால பணிகள் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் முழுவேகம் எடுத்துள்ளன. பல்வேறு மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டுப் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு திறந்து வைத்திருக்கின்றோம். அடையாறு, கூவம் ஆற்றைத் தூய்மைப்படுத்திக் கரையோர பொழுது போக்குப் பூங்காக்கள் அமைக்கும் பணி சீராக, சிறப்பாக நடைபெற்று வருகின்றது. விரைவில், இவை அனைத்தும் சென்னை மக்களுடைய பயன்பாட்டிற்குத் திறக்கப்பட உள்ளது.

**மாநகராட்சிப் பணியாளர்கள்!**

மேலும், கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுக்கவும், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கவும், நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படியாக சென்னைக்குத் திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்து கொண்டிருக்கிறார்கள். அண்மையில் சென்னையில் ஏற்பட்ட கனமழை பாதிப்பைப் பற்றி நம் அத்தனைப்பேருக்கும் தெரியும். அந்த நேரத்தில் களத்தில் இரவு பகல் பாராமல் பணியாற்றியவர்கள் மாநகராட்சிப் பணியாளர்கள். வெள்ளப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டதில் நம்முடைய மாநகராட்சிக்கு மிகப்பெரிய ஒரு பங்கு உண்டு.

**2015–ல் மழையின் போது முடங்கிய சென்னை!**

சென்ற 2015 ஆம் ஆண்டு சென்னையில் இதேபோல் ஒரு மிகப்பெரிய ஒரு வெள்ளம் வந்தது. அப்போது சென்னை 10 நாட்களுக்கு மேல் முடங்கிப் போனது. ஆனால், இந்த முறை பெய்த மழையில் இருந்து இரண்டே நாட்களில் மீண்டு வந்தோம் என்றால், அதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள், மக்கள் பிரதிநிதிகள், குறிப்பாக மாநகராட்சி பணியாளர்கள், அரசு அதிகாரிகளின் பங்கு மிகப்பெரியது.

மேயர் தொடங்கி பொறியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் வரை அனைவருமே களத்தில் இறங்கி பணியாற்றி வந்ததால்தான் தலைநகரை நம்மால் மீட்க முடிந்தது. அதை நாமும் மறக்க மாட்டோம், சென்னை மக்களும் மறக்க மாட்டார்கள். ஏனென்றால், மழை வெள்ள நேரத்தில், பலர் எவ்வளவோ விமர்சித்தாலும், எதிர்மறை கருத்துக்களைச் சொன்னாலும், அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் மக்கள் பணியே முக்கியம் என்று அனைத்து பகுதிகளிலும் சரி செய்த பெருமை நம்முடைய சென்னை மாநகராட்சிக்கு உண்டு.

**நன்றி போதாது!**

சென்னையை மீட்ட கையுடன் சிறிதும் ஓய்வெடுக்காமல் சாலைப் பணிகளோ, கழிவு நீர் அடைப்போ, குடிநீர் இணைப்போ, தூய்மைப் பணியோ எந்தப் பணியாக இருந்தாலும், தங்களது பணியை எந்த எதிர்பார்ப்பும் இன்றி மீண்டும் செய்யத் தொடங்கிய நம் மாநகராட்சி பணியாளர்களுக்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் போதாது. அப்படி மக்களோடு களத்தில் நின்று அவர்களுக்குத் தேவையானவற்றை மாநகராட்சி பணியாளர்கள் தீர்த்து வைத்து வருகின்றீர்கள்.

சென்னையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் உங்களுடைய பெயர் எழுதப்படும். உங்களது பணி சிறக்க நம்முடைய அரசு என்றைக்குமே உங்களுக்குத் துணை நிற்கும் என்று கூறிக் கொண்டு இந்த வாய்ப்பளித்த அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே. சேகர்பாபு, சென்னை மேயர் பிரியா ராஜன், சென்னை மாநகராட்சி ஆணையரும், கூடுதல் செயலாளருமான டாக்டர்.ராதாகிருஷ்ணன், துறையின் செயலாளர் கார்த்திகேயன், சென்னை மாநகராட்சித் துணை மேயர் மகேஷ்குமார், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.வினய், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி நிலைக்குழு – மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

## நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி தலைமையில்

# அரக்கோணம் நகரத்தில் அண்ணா சிலைக்கு மரியாதை!

## மு.கண்ணையன் – ஆர்.தமிழ்ச்செல்வன் –கழகத்தினர் பங்கேற்பு!

*அரக்கோணம், பிப். 7 -*

*அரக்கோணம் நகரத்தில் காஞ்சி தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் கைத்தறி மற்றும் துணிநூல் காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்துறை அமைச்சர், இராணிப் பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி ஆணைக்கிணங்க, அரக் கோணம் நகரக் கழகச் செயலாளர் வி.எல்.ஜோதி தலைமையில் கழகத்தினர் சுவால் பேட் பிள்ளையார் கோவில் அருகில் அண்ணா படத்திற்கு மாலை அணிவித்தனர். பின்பு எஸ்.ஆர். கேட்டிலிருந்து புறப் பட்டு நகரத்தில் உள்ள அனைத்து அண்ணா சிலைகளுக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.*

*இதில் மு.கண்ணையன், ஆர்.தமிழ்ச்செல்வன், என். ராஜ்குமார், லட்சுமிபாரி, துரை சீனிவாசன். எம்.சி, கோ.வ.தமிழ்வாணன், எஸ்.ரமேஷ்பாபு, ஆர்.கே. லிங்கம், எ.தமின்அன்சாரி, வி.பாலகிருஷ்ணன், எம். கே.சிவா, எஸ்.சரவண குமார், எஸ்..பிரசாத், எஸ். பி.மாலின், கருணாகரன், டி.அன்பு, ஜி.ஜன்னிஸ் குமார், அனந்தன், நெப் போலியன், நவீன் ராஜ், எல்.ஜெயபால், ராஜன் குமார்,*

*எஸ்.செந்தில்குமார், கே எம் பி.பாபு, வடிவேல் வண்ணன், கங்காதரன், சிட்டிபாபு, சங்கீதா பாண்டியன், எஸ்.பிரகாஷ், மோகன், ரக்ஷிதா, டி. அந்தோணி மற்றும் வட்ட கழகச் செயலாளர்கள், வட்டக் கழக பிரதிநிதிகள், நகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், நகர மகளிர் அணியினர் , கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.*





தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் உள்ள பஜார் பகுதியில் இந்தியா கூட்டணி வெல்வது நிச்சயம் என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தில், சிறப்பு அழைப்பாளராகத் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பியுமான எஸ்.பீட்டர் அல்போன்ஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி எஸ்.அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட ஊராட்சி தலைவர் பிரம்மசக்தி, உடன்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.பி.பாலசிங் (ஒன்றிய சேர்மன்) உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

## ‘வாட்ஸ் அப்’ பில் வைரலாக வலம் வருவது!

# பா.ஜ.க.வுக்குக் கிடைத்த பளார்... பளார்...

**(வலைதளங்களில் வைரலாக வலம் வரும் ஆடியோ ஒன்று... பா.ஜ.க. ஐ.டி.செல்லில் பணிபுரியும் பெண் ஒருவர், நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்கு சேகரிக்க, சாமான்யர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடுகிறார். அந்த உரையாடல் இதோ ;)**




**கேள்வி:** சார் வணக்கம். நான் மகேஸ்வரி. மாநில பி.ஜே.பி. ஆபிசில் இருந்து பேசுகிறேன். நீங்கள் சார்!

**பதில்:** நான் அர்ஜுனன்.

**கேள்வி:** பிரதமரின் ‘உஜ்வாலா’ திட்டத்தின் கீழ் மானிய விலையில் எரிவாயு வாங்கி பயன்படுத்தி இருக்கீங்களா சார்?

**பதில்:** ஆமாங்க, 350 ரூபாய் விற்ற எரிவாயுவை இப்போது 950 ரூபாய்க்கு வாங்குறோம்.

**கேள்வி:** மானியம் வருதுங்களா சார்?

**பதில்:** மானியம் வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிறது. மானியமும் வரலை. காஸ் (Gas) விலையும் 950, 1000 ரூபாய் ஆகிவிட்டது. 300 ரூபாய் விற்றுக் கொண்டிருந்த காஸ் அது.

**கேள்வி:** வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பீர்களா சார்?

**பதில்:** நானும் ஓட்டுப்போட மாட்டேன். என்னால் முடிந்தால், ஒரு 100 ஓட்டு போடாததற்கு உண்டான வேலையைப் பார்ப்பேன். எங்கே நீங்க கேட்ட கேள்வியை திருப்பிக் கேளுங்க...!

**கேள்வி:** பா.ஜ.க.வுக்கு ஓட்டுப்போடுவீங்களான்னு கேட்கிறேன் சார்.

**பதில்:** பா.ஜ.க.வுக்கு முட்டாள் பையன்தாங்க ஓட்டுப்போடுவான்.

**கேள்வி:** அரசாங்கத்திடமிருந்து உங்கள் எதிர்பார்ப்பு என்ன என்பதைக் கூறுங்கள் சார்! பாரதிய ஜனதா கட்சி உங்கள் நம்பிக்கையைப் பெற கடினமா உழைக்கும் சார்.

**பதில்:** அப்படிங்களா... பாரதிய ஜனதா கட்சி இப்போது உழைத்துக் கொண்டிருப்பதே போதும். நாட்டு மக்கள் எல்லாம் செழிப்பா இருக்காங்க,(?) சந்தோஷமா இருக்கிறாங்க.(?) 60 ரூபாய் விற்ற பெட்ரோல் 110 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி. 350 ரூபாய் விற்ற காஸ் (Gas) 980 ரூபாய், 1000 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி.

650 ரூபாய் விற்ற அரிசி மூட்டை 1500 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி. 100 ரூபாய் விற்ற எண்ணெய், 250 ரூபாய் விற்கிறது. 250 ரூபாய் விற்ற எண்ணெய், 750 ரூபாய் விற்கிறது. அப்புறம் சொல்லுங்க மேடம். வேறு ஏதாவது கேளுங்க.

**கேள்வி:** உங்களது சட்டமன்றத் தொகுதி எது?

**பதில்:** செய்யூர் சட்டமன்றத் தொகுதி. பி.ஜே.பி.யைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க மேடம்?

**கேள்வி:** சார், நான் பி.ஜே.பி.யில் வேலை செய்கிறேன். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வெற்றி பெறச் செய்ய, மோடிஜியை வலுப்படுத்த, தாமரைச் சின்னத்தில் ஓட்டுப்போடுங்க சார்.

**பதில்:** நீங்கள் ஓட்டுப் போட்டாலும், நான் ஓட்டுப் போட்டாலும் – அதானி, அம்பானி, அதானி புள்ளை, அம்பானி புள்ளை, அதானி பேரன், அம்பானி பேரன் – எத்தனையோ ஆயிரம் கோடி திருடிக்கொண்டு ஓடினாங்க பாருங்க... அவங்க குடும்பமெல்லாம் தான் நல்லாயிருக்கும்.

நீயும், நானும் கடைசி வரை ஓட்டுப்போட்டுக் கொண்டுதான் இருக்கணும். சரிங்களா...?

உங்கள் பையன் அரிசி வாங்கும்போது ஒரு மூட்டை அரிசி 5000 ரூபாய் விற்கும். பெட்ரோல் 500 ரூபாய் விற்கும். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே தயவு செய்து பி.ஜே.பி.க்கு ஓட்டு மட்டும் போட்றாதீங்க...

**பெண்மணி :** ஓ.கே.சார். நன்றிங்க சார்.



கலைஞர் 100
1924 - 2023
கல்வி மட்டுமே
சமத்துவம்
மலரச்செய்யும்
மிகப்பெரிய ஆயுதம்
SRI ARTS
7.2.2024– புதன்கிழமை பல்வேறு
நிகழ்ச்சிகளுக்கு திருச்சி வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக...வருக...என வரவேற்கிறோம்...
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர்,நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்–பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.


புதிய தொழில்
முதலீட்டுகளுடன்
தாயகம் திரும்பும்...
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!
மாண்புமிகு இராணிப்பேட்டை R.காந்தி
கைத்தறி (ம) துணி நூல் துறை அமைச்சர் - இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் M.P.
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் - முன்னாள் மத்திய அமைச்சர்
அன்புடன்:
திருத்தணி எஸ்.சந்திரன் B.A.,L.L.B.,M.L.A.
மாவட்ட கழக செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி மற்றும் மாநகர இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணியின்

# இரண்டாவது மாநில மாநாட்டு தீர்மானத்தின் விளக்க தெருமுனை பொதுக்கூட்டமானது



மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திரு. **வில்சன் மணித்துரை** அவர்கள்
மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் திரு. **மாயா** அவர்கள், **L.முகமது மீரான், K.மைக்கேல்** அவர்கள், **M.சபி முகமது** அவர்கள், **பி.எம்.சரவணன்** அவர்கள்,
மாநகர இளைஞரணி அமைப்பாளர் திரு. **கருப்பசாமி கோட்டையப்பன்** அவர்கள்,
மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் திரு. **அலிஃப்மீரான்** அவர்கள், திரு. **அன்பழகன் (எ) ரவி** அவர்கள், திரு. **செல்வம்** அவர்கள், திரு. **இனியன்** அவர்கள், திரு. **குருஜெசி** ஆகியோர் தலைமையில்,
மாநகர துணைச்செயலாளர் திரு.**வி.எஸ்.அப்துல் கையூம்** அவர்கள், பகுதி செயலாளர்கள் தச்சை திரு.**பூ.சுப்பிரமணியன்** அவர்கள், பாளை. திரு. **அன்டன் செல்லத்துரை** அவர்கள், நெல்லை பேட்டை திரு. **இரா.நமச்சிவாயம் (எ) கோபி** அவர்கள், மேலப்பாளையம் திரு. **செ.சாகுல் ஹமீது** ஆகியோர் முன்னிலையில்
மாண்புமிகு. நிதி & மனிதவள மேம்பாட்டுத்துறை மற்றும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு. **தங்கம் தென்னரசு** அவர்களின் அறிவுறுத்தலின்படி
நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள் மற்றும்
தலைமை கழக பேச்சாளர்கள் செல்வி. **சேலம் சுஜாதா,** திரு. தூத்துக்குடி **சரத் பாலா,** திரு. **கவிஞர் மூர்த்தி,** திரு. **நெல்லை முத்தையா,** திரு. **மைக் மணி,** திரு. **திராவிட மணி,** திரு. **பாம்பு கிருஷ்ணன்** ஆகியோர் சிறப்புரை

## – நெல்லை மாநகர கழக செயலாளர் திரு.சு.சுப்பிரமணியன் அறிவிப்பு

| வ. எண் | தேதி / நாள் | நேரம் | பகுதி | இடம் | தலைமை கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 01. | 07-02-2024 புதன்கிழமை | மாலை 5.30 | பாளையங்கோட்டை | பொன்னம்மாள் திருமண மண்டபம் அருகில் M.K.P. நகர் | செல்வி.சேலம் சுஜாதா திரு.திராவிட மணி |
| 02. | | மாலை 6.30 | | பேருந்து நிலையம் அருகில் சமாதானபுரம் | |
| 03. | | இரவு 7.30 | | கோபாலசாமி கோவில் அருகில், பெருமாள் கீழரதவீதி தெற்கு பஜார் | |
| 04. | 09-02-2024 வெள்ளிக்கிழமை | மாலை 5.30 | தச்சநல்லூர் | சிந்துப்பூந்துறை | திரு.நெல்லை முத்தையா திரு.மைக் மணி |
| 05. | | மாலை 6.30 | | முத்துமாரியம்மன் கோவில் அருகில், P.V.T. தியேட்டர் | |
| 06. | | இரவு 7.30 | | காந்திசிலை அருகில் தச்சநல்லூர் | |
| 07. | 10-02-2024 சனிக்கிழமை | மாலை 5.30 | மேலப்பாளையம் | மேலப்பாளையம் பஜார் திடல் | திரு.கவிஞர் மூர்த்தி திரு.பாம்பு கிருஷ்ணன் |
| 08. | | மாலை 6.30 | | கொட்டிக்குளம் பஜார் மேலப்பாளையம் | |
| 09. | | இரவு 7.30 | | மண்டல அலுவலகம் முன்பு மேலப்பாளையம் | |
| 10. | 12-02-2024 திங்கள்கிழமை | மாலை 5.30 | நெல்லை பேட்டை | மீனாட்சி தியேட்டர் அருகில், பேட்டை | திரு. தூத்துக்குடி சரத் பாலா திரு.நெல்லை முத்தையா |
| 11. | | மாலை 6.30 | | மல்லிமால் தெரு, பேட்டை | |
| 12. | | இரவு 7.30 | | மாநகராட்சி தொடக்க பள்ளி அருகில் பழையபேட்டை. | |
| 13. | 13-02-2024 செவ்வாய் கிழமை | மாலை 5.30 | | திருப்பணி முக்கு திருநெல்வேலி டவுண் | திரு. தூத்துக்குடி சரத் பாலா திரு.மைக் மணி |
| 14. | | மாலை 6.30 | | சாலியர் தெரு திருநெல்வேலி டவுண் | |
| 15. | | இரவு 7.30 | | கூலக்கடை பஜார் திருநெல்வேலி டவுண் | |

**சு.சுப்பிரமணியன் B.E., MBA., LLB., செயலாளர் - நெல்லை மாநகர திமுக**

## வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில்

# தலைவரின் சாதனைகளை மக்களிடத்தில் கொண்டுபோய் சேருங்கள்!

## கொக்கரக்கோ சௌமியன் இல்ல மணவிழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!




மயிலாடுதுறை மாவட்டக் கழக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் – கழக எழுத்தாளர் வை.சௌமியன் அவர்களின் மகன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் – மயிலாடுதுறை நகர்மன்ற உறுப்பினர் சர்வோதயன் – தாட்சாயினி இணையரின் திருமணத்தை 'குறிஞ்சி' வளாகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்தினார். அமைச்சர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

சென்னை,பிப்.7-

**மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும், திராவிட இயக்க எழுத்தாளருமான கொக்கரக்கோ சௌமியன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் "நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது. நம்முடைய தலைவரின் சாதனைகளை நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேருங்கள்" என்று வலியுறுத்தினார்.**

**மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும் திராவிட இயக்க எழுத்தாளருமான கொக்கரக்கோ சௌமியனின் மகனும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளருமான சர்வோதயன் என்கிற பாலாஜி - தாட்சாயினி ஆகியோரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்தி வைத்தார்.**

அப்போது மணமக்களை வாழ்த்தி அவர் பேசியதாவது :

"மயிலாடுதுறை மாவட்டச் சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சகோதரர் சௌமியன் அவர்களின் இல்லத் திருமண விழாவில், பங்குபெற்று மணமக்களை வாழ்த்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். சகோதரர் சர்வோதயன் சகோதரி தாட்சாயினி இருவரின் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்க மயிலாடுதுறை செல்வதாக இருந்தது. ஆனால், இன்றைக்கு நம்முடைய குறிஞ்சி இல்லத்தில் இந்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது.

ஏற்கனவே ஒப்புக்கொண்ட வேறு சில நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்பதால், அந்தத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அதை நான் சொன்னதும், புரிந்துகொண்டு நீங்கள் மயிலாடுதுறை வரவில்லை என்றாலும் பரவாயில்லை, நாங்கள் உங்கள் வீட்டுக்கு வந்து விடுகிறோம் என்று சொல்லி இன்றைக்கு மிகச் சிறப்பாக மகிழ்ச்சியோடு நம்முடைய வீட்டுத் திருமணம் இங்கு நடந்திருக்கிறது.

### கழக உணர்வுள்ள குடும்பம்!

பொதுவாக திருமண நிகழ்ச்சிகளில் திருமண வீட்டார்களைச் சேர்ந்தவர்கள் வருக வருக என அனைவரையும் வரவேற்பார்கள். இது நம் வீட்டில் நடைபெறுகின்ற திருமணம். அதனால் இங்கு வந்திருக்கின்ற உங்கள் அத்தனை பேரையும் நம் வீட்டுக்கு வருக வருக என்று நான் வரவேற்கின்றேன். சகோதரர் சௌமியனாக இருக்கட்டும், சர்வோதயனாக இருக்கட்டும் அவர்களுடைய குடும்பமே கழகக் குடும்பம், கழக உணர்வுள்ள குடும்பம்.

### அண்ணாவின் முதல் சிறுகதை!

சௌமியினுடைய தந்தையார் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தொடக்கக் கால செயல்வீரர். சௌமியனைப் பொறுத்தவரை, சோசியல் மீடியாவில் எங்கள் எல்லோருக்கும் முன்னோடி. பிளாக்கில் எழுதியவர். சௌமியனின் குடும்பம் எந்தளவிற்கு கழக உணர்வுள்ள குடும்பம் என்பதைச் சொல்ல விருப்பப்படுகின்றேன்.

சௌமியன் என்ற பெயரே மிகவும் வித்தியாசமான ஒரு பெயர்தான். ஆனால் அந்தப் பெயரை அவருக்குச் சூட்டியவர் யார் என்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். சௌமியன் என்ற அந்தப் பெயருக்குச் சொந்தக்காரர் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் புனைப்பெயர் தான் சௌமியன். அண்ணாவின் முதல் சிறுகதை `ஆனந்த விகட'னில் வெளியானது. அந்தச் சிறுகதையின் பெயர் 'கொக்கரக்கோ'. அந்தக் கதையை சௌமியன் என்ற புனைப் பெயரில் எழுதியவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இங்கு இருக்கின்ற சௌமியன் அவர்கள் பின்னாளில் சௌமியன் என்ற பெயரில் `கொக்கரக்கோ' என்ற வலைத்தளத்தை நடத்தினார். குறிப்பாக, 2009-2011 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அப்போது நாங்கள் சோசியல் மீடியாவில் இல்லை. எங்களுக்கெல்லாம் முன்னோடியாக முன்னால் போனவர்தான் சௌமியன். அப்பொழுது நம் தலைவர் மேல், கலைஞர் மேல் யாராவது அவதூறு பரப்பினால் அதற்கெல்லாம் தன்னுடைய பிளாக்கில் தக்க பதிலடி கொடுத்தவர்தான் சௌமியன்.

### களத்திலும் மக்களைச் சந்திப்பார்!

குறிப்பாக, நம்முடைய தலைவர் மீதும் என் மீதும் தனிப் பாசம் கொண்டவர். சிலர் பத்திரிகையில், சோசியல் மீடியாவில் எழுதுவார்கள். இன்னும் சிலர் களத்தில் மக்களைச் சந்திப்பார்கள். ஆனால், இந்த இரண்டையும் சரிசமமாகச் சிறப்பாகச் செய்கின்றவர் தான் சௌமியன் அவர்கள். சோசியல் மீடியாவிலும் சிறப்பாகச் செயல்படுவார், களத்திலும் மக்களைச் சந்திப்பார்.

கழக ஆட்சி அமைந்தபோது 2021 ஆம் ஆண்டு கொரோனா பேரலை, லாக்டவுன். அப்பொழுது சௌமியன் அவர்கள் தன்னுடைய நிறுவனத்தின் சார்பாகத் தயாரித்த 500 சத்துமாவு பாக்கெட்டுகளை எனக்கு அனுப்பி வைத்தார். `தொகுதி முழுக்கக் கொடுங்கள், இது மிக மிகத் தேவை' என்று சொன்னார். முதலில் 500 பாக்கெட்டுகள்தான் கொடுத்தார். 'இது எப்படிப் போதுமானதாக இருக்கும். மக்கள் இன்னும் அதிகமாக எதிர்பார்ப்பார்கள்' என்று சொன்னேன்.

'நான் அடுத்த 10 மாதத்திற்குத் தருகிறேன்' என்று சொல்லி கிட்டத்தட்ட 5,000 பாக்கெட்டுகளை அடுத்த 10 மாதங்களுக்கும் கோவிட் லாக்டவுன் காலம் முடிகின்ற வரைக்கும் கொடுத்தார். அந்த நேரத்தில் நான் தனிப்பட்ட முறையில் நன்றி சொல்லவில்லை. இந்த மேடையை அவருக்கு நன்றி சொல்ல பயன்படுத்திக் கொள்கின்றேன்.

சௌமியனின் வழியில் இன்றைக்கு அவருடைய மகன் அருமைச் சகோதரர் சர்வோதயன் அவர்களும் கழகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். மயிலாடுதுறையில் நகராட்சி மன்ற உறுப்பினராக இன்றைக்கு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகள்.

### 25 வருடங்களுக்குப் பிறகு வெற்றி!

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மயிலாடுதுறையில் அவருடைய வார்டில் 25 வருடங்களுக்குப் பிறகு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் சௌமியன் அவர்களும், சர்வோதயன் அவர்களும்தான். எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களுக்கும் டெபாசிட் போனது என்றால், அதிலேயே அவருக்கு மக்களிடத்தில் இருக்கக்கூடிய செல்வாக்கு, மக்கள் பணியில் அவர் காட்டக்கூடிய வேகம் தெளிவாகத் தெரிகின்றது.

சர்வோதயன் மிகுந்த சமூக அக்கறை உள்ளவர். தங்கை அனிதா நீட் தேர்வால் உயிரிழந்த போது, தான் படித்த ஏ.வி.சி கல்லூரியில் ஒட்டு மொத்த மாணவர்களையும் திரட்டி ஒரு மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தவர்தான் தம்பி சர்வோதயன். தொடர்ந்து கழகப் பணிகளில் ஈடுபட்டு கழகத்திற்காக உழைத்து வருகிறார்.

அவருடைய உழைப்புக்கு ஓர் அங்கீகாரமாகத்தான் அவரை இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளராகப் பொறுப்பு கொடுத்து இருக்கின்றோம். அந்தப் பொறுப்பையும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார். இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கக்கூடிய தம்பி சர்வோதயன் சகோதரி தாட்சாயினிக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய கழகத் தலைவர் உலக முதலீட்டாளர்களை சந்திப்பதற்காக ஸ்பெயின் நாட்டில் இருக்கிறார். இரண்டு நாட்களில் சென்னைக்கு வருகிறார். நேற்று நள்ளிரவு ஒரு மணி தலைவர் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்தார். அங்கும் இங்கும் ஐந்து மணி நேரம் வித்தியாசம். அவர்களுக்கு அங்கே மாலை ஏழரை மணி.

### தலைவர் கேட்ட முதல் கேள்வி!

தலைவர் அவர்களும் என்னுடைய அம்மா அவர்களும் பேசினார்கள். தலைவர் கேட்ட முதல் கேள்வி, 'நாளை காலை சௌமியன் வீட்டுக் கல்யாணம் இருக்கிறது.அதை நீ நடத்தி வைக்க வேண்டும். மறந்து விடாதே' என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு எங்கிருந்தாலும் நம்முடைய தலைவர் அவர்கள் நம்முடைய சௌமியன் வீட்டுத் திருமணம் மிகச் சிறப்பாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இருந்திருக்கிறார்கள். இங்கே இருந்திருந்தால் அவர்கள் நேரில் வாழ்த்தியிருப்பார்கள். அங்கிருந்தாலும் அவர்கள் வாழ்த்தி கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வந்த பிறகு, கண்டிப்பாக மணமக்களைச் சந்தித்து அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவிப்பார்கள்.

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். மணமகன் இளைஞர் அணித் துணை அமைப்பாளர். அதிக அட்வைஸ் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் எனக்கு அட்வைஸ் சொல்கிறவர்தான் அண்ணன் சௌமியன் அவர்கள். அந்த அளவிற்குக் கழகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்.

இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது. நம்முடைய தலைவர் ஆற்றி இருக்கக்கூடிய சாதனைகளை நீங்கள் மக்களிடம் கொண்டு போய்ச் சேருங்கள். மணமகன் மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர். திருமணமானாலும் தேர்தல் பணிகளில் அடுத்த இரண்டு மாதத்திற்கு நீங்கள் ஈடுபட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்தத் திருமண விழாவில், கழகத்தின் முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா முருகன், மயிலாடுதுறை நகரச் செயலாளர் குண்டாமணி, மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி, கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இளையராஜா, பிரகாஷ், மருத்துவர் ராஜாமூர்த்தி மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராம இளங்கோவன், ஒன்றியச் செயலாளர் முருகமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருது என்கிற மருதமுத்து உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

---

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து விழுப்புரத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில்

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி, பிப் 7-

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் விழுப்புரம் மாவட்டத்தின் சார்பில் நாளை (பிப்ரவரி 8ஆம் தேதி வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகம் எதிரில் மாநில உரிமைகள் காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. விழுப்புரம் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்குகிறார்.



இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு தி.மு.க. சார்பில் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள் அனைத்து கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள்அனைவரும் கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடியினை கையில் ஏந்தி கண்டன முழக்கமிட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நெய்வேலி நகர தி.மு.க. மற்றும் தொ.மு.ச. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் அமைதி பேரணி நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். நெய்வேலி நகரச் செயலாளர் வி.பக்கிரிசாமி முன்னிலை வகித்தார். அமைதிப் பேரணி செல்வராஜ் மன்றத்திலிருந்து தொடங்கி, பேரணியாகச் சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னியன், மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, நகர அவைத்தலைவர் நன்மாற பாண்டியன், தொ.மு.ச. தலைவர் பா.திருமாவளவன், பொருளாளர் ஆர்.ஐயப்பன், முன்னாள் தொ.மு.ச நிர்வாகிகள் வீர.ராமச்சந்திரன், சிவந்தான் செட்டி, குருநாதன், நகர பொருளாளர் மதியழகன், நகர துணைச் செயலாளர் செந்தமிழ்ச் செல்வன், கருப்பன் இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ், சதாம், பகுதறிவு பாலு, தொ.மு.ச. துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள், செயலாளர் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

---

## கலைஞரின் நூற்றாண்டு விழா

# கம்மாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் கொடி ஏற்று விழா!

## அமைச்சர் சி.வெ. கணேசன் பங்கேற்பு!

கடலூர்,பிப்.7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் சார்பில் முடப்புள்ளி, இருப்பு, வீரட்டிக்குப்பம்,மேலக்குப்பம், அம்மேரி, ஆதண்டார்கொல்லை, தொப்பிளிகுப்பம்,பெரியகாப்பான்குளம், இருப்பு, கொல்லிருப்பு, நண்டு குழி செடுத்தான்குப்பம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நெய்வேலி அடுத்த பெரிய காப்பான் குளம் கிராமத்தில் ஊராட்சியில் கழகக் கொடி ஏற்றி கல்வெட்டுத் திறந்து வைத்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கம்மாபுரம் கிழக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஆசைத்தம்பி, கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், பெரியகாப்பான் குளம் ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச் செல்வி அரங்கநாதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண் பிரபாகர், கம்மாபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், அரங்கநாதன், சக்திவேல், சேதுராமன், பழனிச்சாமி, தட்சிணாமூர்த்தி, கலையரசி, சீனிவாசன், ஆசிரியர் பெருமாள் நிர்வாகிகள் சந்திரகாசி ஆறுமுகம், பஞ்சாலம், வெங்கடேசன், ராமமூர்த்தி, அண்ணாமலை மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகி உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர் தலைமையில், நாகர்கோயில் மாநகராட்சிக்குட்பட்ட தொல்லவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மக்களை தேடி ஆய்வகம் சேவை திட்டத்தினை நேற்று முன்தினம் (05.02.2024) தொடங்கி வைத்தார்கள். உடன் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) ரஜத் பீட்டன் உட்பட பலர் உள்ளனர்.




நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவைத் தொகுதி வாரியாக நடைபெற்றன. திண்டுக்கல் மக்களவைத் தொகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் சென்னை – அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், நேற்று நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை – தொகுதி மக்களின் தேவைகள் – தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்டக் கழகச் செயலாளர், – சட்டமன்ற உறுப்பினர்கள், – மாவட்ட – ஒன்றிய – பகுதி – நகர – பேரூர்க் கழக நிர்வாகிகள், – மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# இளைஞரணி மாநாட்டு தீர்மான விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் திருமதி கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப்.7-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. மாநில இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டில் கடந்த 21.01.2024 அன்று சேலத்தில் தி.மு.க. இளைஞரணியின் 2 வது மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை பொதுமக்களிடம் விளக்கி இளைஞரணி சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்திட மாநில இளைஞரணிச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முதல் கட்டமாக கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கீழக் கண்ட தேதிகளில் அறிவிக்கப்பட்ட இடங்களில் இளைஞரணி தீர்மான விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்கழக இளைஞரணி நிர்வாகிகள் சிறப்பாக செய்திடவும் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்கழக செயலாளர்கள் ஒத்துழைப்பு நல்கிடவும் கேட்டுக் கொள்கிறேன்.



கீழ்கண்டவாறு பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இக்கூட்டங்களில் தலைமைக் கழகப் பேச்சாளர் சரத் பாலா பேசுகிறார்.

7.2.2024 - மாலை 5 மணி-கயத்தாறு மத்திய ஒன்றியம், இரவு 7.00-கயத்தாறு கிழக்கு ஒன்றியம், 8.2.2024- மாலை 5 மணி - கடம்பூர் பேரூர்,இரவு 7.00-கயத்தாறு கிழக்கு ஒன்றியம், 9.2.2024-மாலை 5 மணி-கோவில்பட்டி மேற்கு ஒன்றியம், இரவு 7.00-கோவில்பட்டி நகரம், 10.02.2024-மாலை 5 மணி-கோவில்பட்டி மத்திய ஒன்றியம், இரவு 7 மணி கோவில் பட்டி நகரம், 11.02.2024-மாலை 5 மணி-கோவில் பட்டி மேற்கு ஒன்றியம், இரவு 7.00-கோவில்பட்டி மத்திய ஒன்றியம்.

இவ்வாறுஅவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரையில் 7ம் தேதி கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

# மதுரை, சிவகங்கை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் பங்கேற்பதற்கான கால அட்டவணை வெளியீடு!

## கழகத்தினர் அனைத்து தரப்பினர் பங்கேற்க மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ.- சேடப்பட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்







மதுரை, பிப்.7-

தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருமிகு.கனி மொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையிலான நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையை தயாரிக்கும் குழு வரும் 07.02.2024ம் தேதி, புதன்கிழமை காலை 9 மணியளவில் மதுரை பாண்டி கோவில் ரிங்ரோடு அருகிலுள்ள துவாரகா பேலஸ் மண்டபத்தில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு தொடர்பான கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மதுரை, சிவகங்கை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் துறை யினர், கல்வியாளர்கள், மீன வர்கள், சிறு, குறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், சூழலியலா ளர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்தித்து அவர்களின் கோரிக்கை களை பெறுவார்கள்.

எனவே இக்கூட்டத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சேர்ந்தவர்கள் 7ந்தேதி காலை 10 மணி முதல் 10.45 மணி வரையிலும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 10.45 மணி முதல் 11.30 மணி வரையிலும், தேனி வடக்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 11.30 மணி முதல் நண்பகல் 12.15 வரையிலும், தேனி தெற்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 12.15 மணி முதல் மதியம் 1மணி வரையிலும் அதனை தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 1 மணி முதல் 1.45 மணி வரையிலும் பின்னர் மதுரை மாநகர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 1.45 மணி முதல் 2.30 மணி வரையிலும், மதுரை வடக்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 2.30 மணி முதல் 3.15 மணி வரையிலும், மதுரை தெற்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 3.15 மணி முதல் 4மணி வரையிலும் பங்கேற்று தங்கள் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகளை நேரடியாகவோ மனுக்கள் மூலமாகவோ வழங்கி சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணி மாறன் ஆகியோர் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.




தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா திருஉருவப்படத்திற்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் ச.தங்கவேலு, யு.எ.டி. சீனிவாசன்,டாக்டர் செண்பக விநாயகம் இல.சரவணன் மனோகரன்,ராஜதுரை,புனிதா லாலா சங்கரபாண்டியன் கடற்கரை,பெரியதுரை,வெற்றி விஜயன், பூஜைபாண்டியன், பொன். முத்தையா பாண்டியன், கிறிஸ்டோபர், சேர்மதுரை, ராமச்சந்திரன்,சாகுல் ஹமீது, தேவதாஸ்,நகர செயலாளர் பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.பின்னர் அங்கிருந்து அமைதிப் பேரணியாக வந்து அசெம்பிளி லாட்ஜ் முன்பு அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை.பிப்.7-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாநில உரிமைகள் காத்திட "மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி"யின் சார்பில் நாளை (8.2.2024-வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் பாளை தெற்கு பஜார் நூர்து நாதன் சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள்,திரளாக பங்கேற்க வேண்டும்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

மாநில உரிமைகள் காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை (8ம் தேதி வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக நமது கண்டன குரலை எழுப்பிவிட வேண்டும்.என கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.



எனவே கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது இரு வண்ணக் கொடியோடு நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர், கழகச் செயலாளர்கள்,சார்பு அணி அனைத்து நிர்வாகிகள்,கழகத் தோழர்கள் மற்றும் ஒத்த கருத்துடைய பெரியோர்,ஆன்றோர் பொது மக்கள் உள்ளிட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன குரல் எழுப்பிட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

# தென்காசி மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பு!

## தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் - வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிக்கை!

தென்காசி, பிப்.7-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில உரிமைகள் காத்திட கூட்டாட்சி கோட்பாட்டை சிதைக்கும் வகையில் ஆளுநர்கள் மூலம் ஆட்சி செய்ய துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாளை (080224 வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும். என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெய பாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





இது தொடர்பாக அவர்களது வேண்டுகோள் விவரம் வருமாறு.

நம் கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி நாளை 8ம் தேதி வியாழக்கிழமை மாலையில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது திராவிட முன்னேற்ற கழக,மாவட்ட நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு,உறுப்பினர்கள்,ஒன்றிய, பேரூர், வட்ட,கிளைக்,கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,கழக சார்பு அணி நிர்வாகிகள்,கழக உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க.அரசை கண்டித்து மாநில உரிமைகள் காத்திட பெரியோர், ஆன்றோர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்ய கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்கு

# ரூபாய் 5.36 கோடியில் புதிய ஊராட்சி ஒன்றிய கட்டிடம்!

## ஒன்றியகுழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர் தகவல்

சிவகங்கை, பிப்.7-

சிவகங்கை ஊராட்சி ஒன்றியகுழு சாதாரண கூட்டம் ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர் தலைமையில் நடைபெற்றது. ஆணையர்கள் பத்மநாபன் பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஒன்றிய குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர் கூறியதாவது. தமிழ்நாடு அரசு சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிதாக 5 கோடியே 36 லட்சத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான டெண்டர் பணிகள் விரைவில் விடப்பட்டு கட்டுமான பணிகள் துவங்க உள்ளது .புதிதாக இந்த கட்டிடம் நவீன வடிவில் அமைக்கப்பட உள்ளது என்று கூறினார்.

மேலும் இந்த கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் கருப்பணன், திருமதி பத்மா, நதியா, சுரேஷ், வேல்முருகன், துணைத்தலை வர் கேசவன் ஆகியோர்பேசியதாவது. பள்ளிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்ட கோரியும் சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் கழிவுகள் கட்டப்படுவதையும் ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறும் கூறினார்கள். இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக ஒன்றியக் குழு தலைவர் தெரிவித்தார். கூட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் என்ற புதிய திட்டம் கொண்டுவந்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறவேற்றப்பட்டது. மேலும் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## போலீஸ் அ.பன்னீர்

**பிப்ரவரி 7 (2023)**



தனது இளமைப் பருவத்திலேயே பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்மீது கொண்ட பற்றால் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நாகப்பட்டினம் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சென்னை வடகிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

# டி.ராமகிருஷ்ணன் சகோதரர் டி.ஏழுமலை மறைவு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் - மீ.வே.கருணாகரன் - நா.பரந்தாமன் அஞ்சலி!

சென்னை, பிப். 7 -

சென்னை வடகிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன் சகோதரரும் கும்மனூர் கழக முன்னோடியும் மாவட்டப் பிரதிநிதியுமான டி.ஏழுமலை (எ) தமிழ்தாசன் (வயது 85) 2.2.2024 - வெள்ளிக்கிழமையன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், நேரில் சென்று மறைந்த டி.ஏழுமலை உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்டத் தலைமைக் கழக அலுவலகம் முன்பிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமையிலும் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் – வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் துவங்கி ஒழுகினசேரி வழியாக சென்று வடசேரி அண்ணா சிலை அருகே நிறைவுற்றது. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜுடன் வடசேரியில் உள்ள அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### புதுடெல்லி - குடியரசு தின விழாவில் பங்கேற்க அடுத்த ஆண்டு விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவர்!

# என்.சி.சி., ஒழுக்கம் - காலம் தவறாமை - பொறுப்புணர்வை இளையோர் மனதில் விதைக்கிறது!

## புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த

## என்.சி.சி. மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

**சென்னை, பிப். 7–**

**குடியரசு தின விழாவில் பங்கேற்றிட என்.சி.சி. மாணவ – மாணவியர் விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும், ஒழுக்கம், காலம் தவறாமை, பொறுப்புணர்வை இளையோர் மனதில் விதைக்க என்.சி.சி. உதவுகிறது என்று என்.சி.சி. மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்டு ஒன்றிய அளவில் மூன்றாம் இடம் பிடித்து தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ள என்.சி.சி. மாணவ-மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

"குடியரசு தின அணிவகுப்பில் வென்று வந்துள்ள நமது என்.சி.சி. மாணவர்களைச் சிறப்பிக்கும் இந்த நிகழ்வில் நான் கலந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த வாய்ப்பை எனக்குத் தந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.சி.சி.யில் சேரவில்லை நாட்டு நலப் பணியில் சேர்ந்துவிட்டேன்!**

நான் பள்ளியில் படிக்கும்போது என்.சி.சி.யில் சேர விரும்பினேன். ஆனால் நான் தேர்வாகவில்லை. அதனால் நான் என்.எஸ்.எஸ். (நாட்டு நலப்பணித் திட்டம்) அமைப்பில் சேர்ந்துவிட்டேன்.

சில நாட்களுக்கு முன்பு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற என்.எஸ்.எஸ் மாணவர்களை நம்முடைய இல்லத்தில் சந்தித்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டேன். இன்றைக்கு என்.சி.சி மாணவர்கள் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். என்.எஸ்.எஸ் ஆனாலும் சரி, என்.சி.சி ஆனாலும் சரி எப்பொழுதுமே உங்களுடன் இணைந்து பயணிப்பேன் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த முறை இதே அரங்கில், கடந்த ஆண்டு என்.சி.சி மாணவர்களுக்கான பாராட்டு விழா இதே கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. அப்போது நீங்கள் ஒரு கோரிக்கையை வைத்திருந்தீர்கள். குடியரசு நாள் அணிவகுப்புக்காக டெல்லிக்கு ரயிலில் சென்று வந்து கொண்டிருக்கிறீர்கள். ஒருநாள் நிகழ்ச்சிக்காக ஆறு நாள் பயணம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று ஒரு கோரிக்கை வைத்தீர்கள்.

**விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவார்கள்!**

விமானத்தில் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற உங்களின் கோரிக்கையை, 'உடனே நிறைவேற்றித் தருகிறோம்' என்று அந்த நிகழ்ச்சியில் நான் பேசும்போது அறிவித்தேன். சட்டப்பேரவையிலும் அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டோம். அதற்கான ஆணையும் வெளியாகி அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்தோம். எனினும் ஒரு சில தவிர்க்க முடியாத காரணங்களால் உங்களால் இந்த ஆண்டு விமானத்தில் செல்ல முடியவில்லை.

என்.எஸ்.எஸ்-ஐச் சேர்ந்த 13 மாணவர்களும் விமானத்தில் தான் டெல்லிக்குச் சென்று குடியரசு அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று வந்தார்கள். வருகின்ற ஆண்டு நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்புக்கு நிச்சயம் நீங்கள் விமானத்தில் சென்று வருவதற்கான ஏற்பாட்டை நாங்கள் மேற்கொள்வோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய தேசிய மாணவர் படை வியக்கத்தக்க சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். நடந்து முடிந்த குடியரசு தின அணிவகுப்பில் தனிப்பட்ட சாதனைகளுடன் குழுவாக அவர்கள் மூன்றாம் இடத்தை பிடித்திருக்கிறார்கள்.

டெல்லியில் நடந்த அகில இந்தியப் போட்டிகளில் நமது மாநிலத்தை சேர்ந்த 117 தேசிய மாணவப் படையினர் கலந்து கொண்டனர். இராணுவ படை பிரிவில் அம்ரில் மில்ட் எனும் மாணவர் தங்க பதக்கம் வென்றார். மஞ்சுஸ்ரி எனும் மாணவி விமானப் படை பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றார். ஷகிரா நௌசத் எனும் மாணவி குதிரைப்பந்தயம் சார்ந்த போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

நிதி ரீதியாகவும், உள் கட்டமைப்பு ரீதியாகவும் தேசிய மாணவர் படைக்கு மிகுந்த ஆதரவு அளித்து வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முகாம்கள் நடத்துவதற்கான நிதி வசதி, கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் இளைஞர் மேம்பாட்டுக்கு தமிழ்நாடு அரசு கொடுத்துவரும் ஆதரவு வெளிப்படுகிறது.

**நிதியை உயர்த்தி வழங்கும் அரசு!**

குடியரசு தின முகாம் மற்றும் ஒன்றிய அரசு நடத்தும் முகாம்களுக்கான நிதியை ஆண்டுக்கு ரூ.60 இலட்சம் என்பதிலிருந்து ரூ.1 கோடியாக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. மேலும் முதலமைச்சர் பேரணி தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்டு திரும்பிய மாணவர்களுக்கு அளிக்கப்படும் பாராட்டு விழாக்களுக்கு அளிக்கப்படும் நிதியானது ஆண்டுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகைய நிதி உதவிகளின் மூலம் நமது என்.சி.சி மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். இதுபோன்ற ஆதரவுகள் நமது மாநிலத்தின் என்.சி.சி-யின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உதவியாக இருக்கும்.

என்.சி.சி மாணவர்களின் துப்பாக்கி சுடும் பயிற்சிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காக வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.1 இலட்சத்து 74 ஆயிரம் என்பதிலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டு முழுவதும் நம்முடைய என்.சி.சி மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பல்வேறு விருதுகளை வென்று வந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு அந்த மாணவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டை எடுத்துகாட்டுவதாக இந்த சாதனைகள் அமைந்துள்ளன.

**வெள்ளப் பாதிப்பில் அரசுக்கு துணையாக நின்றவர்கள்!**

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த டிசம்பர் மாதம் கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் ஏற்ப்பட்டது. மிக்ஜாம் புயலால் சென்னையில் கனமழை பெய்து மிகப் பெரிய ஒரு சேதம் ஏற்பட்டது. அதேபோல் தென் மாவட்டங்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் கனமழை பெய்தது. அப்பொழுது வெள்ள மீட்புப் பணிகளில் அரசுக்கு பெரும் துணையாக நின்றவர்கள் நம்முடைய என்.சி.சி மாணவர்கள்தான். அவர்களுக்கு அரசின் சார்பாக அன்பையும் வாழ்த்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். ஏனென்றால் உயிரைப் பணயம் வைத்து வெள்ள நீருக்குள் நீந்திச் சென்று அங்கிருந்த பொதுமக்களின் உயிரை காப்பாற்றியது என்.சி.சி மாணவர்களாகிய நீங்கள்தான்.

திருநெல்வேலி வெள்ளத்தின்போது, தனது அசாத்தியமான துணிச்சலை வெளிப்படுத்தி பல உயிர்களைக் காப்பாற்றிய நமது என்.சி.சி. மாணவர் டேனியல் செல்வ சிங் அவர்களின் பணியை நான் கட்டாயம் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவரது வீரதீரச் செயலைப் பாராட்டி இந்த ஆண்டு நமது தமிழ்நாடு அரசு அவருக்கு பேரறிஞர் அண்ணா பதக்கத்தை வழங்கி கௌரவித்துள்ளது. போலவே சென்னையில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தின்போது நமது என்.சி.சி. வீரர்கள் காட்டிய தன்னலமற்ற உழைப்பை நாம் பாராட்டியே ஆக வேண்டும். சென்னை மாநகராட்சியுடன் சேர்ந்து அவர்கள் இணைந்து பணியாற்றிய காரணத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு சேர்க்க முடிந்தது. இது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் நமது என்.சி.சி. வீரர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்கள்.

**கொரோனா பெருந்தொற்று காலத்தில் பணிபுரிந்த மக்கள்!**

அதேபோல, கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலும் அவர்கள் போக்குவரத்தை கட்டுப்படுத்துவது, வரிசையில் நிற்கும் மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

குடியரசு தின அணிவகுப்பில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்திய ஒவ்வொரு என்.சி.சி. வீரருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய சமுதாயம் மேன்மை பெற, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்.

இந்தத் தருணத்தில் என்.சி.சி.யின் முக்கியத்துவம் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒழுக்கம், காலம் தவறாமை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை இளையோர் மனத்தில் விதைக்க என்.சி.சி. உதவுகிறது. இங்கே வந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் எனது அன்பையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் மக்கள் சேவை தொடரட்டும். தமிழ்நாடு அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் முதன்மை செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ், லெஃப்டினென்ட் ஜெனரல் கே.எஸ்.ப்ரார், ரியர் அட்மிரல் ரவிக்குமார் டிங்ரா, கமோடோர் அதுல் குமார் ரஸ்தோகி, இன்ஸ்பெக்டர் ஜெனரல் டோனி மைக்கேல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.







புது டெல்லியில் அண்மையில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த National Cadet Corps திட்ட மாணவ, மாணவியர்கள் இந்திய அளவில் 3 ஆம் இடம் பிடித்து நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் திறமையை அங்கீகரிக்கும் விதமாக சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு விழாவில் நம் NCC cadets–க்கு ஊக்கத்தொகை மற்றும் கோப்பைகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தி மிக்ஜாம் புயலால் சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் தென்மாவட்ட மழை வெள்ளப் பாதிப்புகளின் போது, NCC மாணவர்கள் ஆற்றிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை பாராட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார். சேவை மனப்பான்மையோடு செயல்பட்டு வரும் National Cadet Corps திட்ட மாணவ, மாணவியர்களுக்கு நமது திராவிட மாடல் அரசு நிச்சயம் உறுதுணையாக இருக்கும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

---

### வேளாண் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுகோள்!

# வேளாண் கட்டமைப்பு நிதியின்கீழ் - கடன் வசதி பெறும் திட்டம்!

## வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கம்!

சென்னை, பிப் 7 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண் கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதி பெறும் திட்டம் தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு :-

பயிர் அறுவடைக்குப் பின்னர், விளைபொருட்களை காய வைத்தல், சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், மதிப்பு கூட்டுதல் உள்ளிட்ட பணிகளுக்கான வேளாண் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இது ஒரு கடன் உதவி திட்டமாகும். 2020-21 இல் துவங்கப்பட்ட இத்திட்டமானது 2032-33 வரை செயல்பாட்டில் இருக்கும்.

**திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

**வட்டி சலுகை :**

அதிகபட்சமாக ரூ. 2 கோடி வரையிலான கடனுக்கு, ஏழு ஆண்டு காலத்திற்கு ஆண்டிற்கு 3% வட்டி குறைப்பு (Interest Subvention) வழங்கப்படுகின்றது. கடன் தவணைத் தொகையை திருப்பி செலுத்த விலக்களிக்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகள் உட்பட, அதிகபட்சம் 7 ஆண்டுகளுக்குள் கடன் திருப்பி செலுத்தப்பட வேண்டும். ரூபாய் இரண்டு கோடி வரை கடன் உத்தரவாதம் வழங்கப்படும். மத்திய மற்றும் மாநில அரசு மானிய திட்டங்களை வேளாண் கட்டமைப்பு நிதி திட்டத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் அதிக பயன்களை பெறலாம்.

**திட்டப் பயனாளிகள்:**

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs), சுய உதவிக் குழுக்கள் (SHGs), விவசாயக் குழுக்கள், பெண் தொழில் முனைவோர்கள், விருப்பமுள்ள கிராமப்புற இளைஞர்கள், வேளாண் தொழில் முனைவோர்கள், புதிதாக தொழில் துவங்க முன்வரும் நிறுவனங்கள் (Start Ups), தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (PACCS), சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்புகள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLGs), கூட்டுறவு விற்பனை சங்கங்கள், பல்வகை கூட்டுறவு சங்கங்கள், மத்திய / மாநில அமைப்புகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் முன்மொழியப்படும் அரசு, தனியார் பங்கேற்புடன் கூடிய அமைப்புகள், வேளாண் விளைபொருட்கள் விற்பனைக் குழுக்கள் (APMCs), தேசிய மற்றும் மாநில கூட்டுறவு கூட்டமைப்புகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கூட்டமைப்புகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.



**திட்டக் கூறுகள்: அறுவடைப் பின் மேலாண்மைக்கான கட்டமைப்பு வசதிகள்:**

மின்னணு சந்தையுடன் கூடிய விநியோக தொடர் சேவை, சேமிப்புக் கிடங்குகள் (Godowns), சேமிப்பு கலன்கள் (Silos), சிப்பம் கட்டும் கூடங்கள் (Pack houses), தரம் பிரிப்பு மற்றும் வகைப்படுத்துவதற்கான இயந்திரங்கள், குளிர்பதன வசதிகள் (Cold storages), முதன்மை பதப்படுத்தும் மையங்கள் (Primary Processing Centres), பழுக்க வைக்கும் அறைகள் (Ripening chambers) போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**பொதுவான வேளாண் கட்டமைப்பு வசதிகள்:**

இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி, நுண்ணுயிர் உற்பத்தி நிலையங்கள், நவீன மற்றும் துல்லிய பண்ணையத்திற்கான கட்டமைப்புகள், பகுதிக்கேற்ற பயிர் தொகுப்புகளை உருவாக்கி ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்துதல், அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் அமைக்கப்படும் கட்டமைப்புகள், போக்குவரத்து வசதிகள் போன்ற இனங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டம் குறித்த விரிவான தகவல்களை அறியவும், விண்ணப்பிக்கவும் www.agriinfra.dac.gov.in இணையதளத்தினை அணுகலாம். மேலும், விவரங்களுக்கு, அந்தந்த மாவட்டத்தில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் மாவட்ட தொழில் மையங்களையும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி விவசாயிகள் வேளாண் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# திராவிடப் போராளிகள்

53 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## மகளிர் கண்ட கொள்கை உரம் இராணி அண்ணாதுரை


ஓவியம் : ரவி பேலட்

மகளிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்றது அல்ல' மகளிர் மன்றத் துவக்க விழாவில் தோழியர் இராணி அண்ணாதுரை அன்பழைப்பு', என்ற தலைப்பில் 6.11.1956 ஆம் தேதி வெளியான 'நம்நாடு' இதழில் வெளியான செய்தியை இப்போது படிப்பவர்கள் வியப்படையக்கூடும். ஆனால், இராணி அண்ணாதுரை என்ற திராவிடப் போராளியின் வாழ்க்கைப் பதிவுகள் இதைப் போல நாம் படித்திராத வரலாற்றுப் பக்கங்களை அடையாளம் காட்டுகின்றன.

சென்னை அருகிலுள்ள திருமுல்லைவாயில் என்ற சிற்றூரில் பக்தியும் சமய நம்பிக்கையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த இராணி தன் 15-வது வயதில் பேரறிஞர் அண்ணாவை மணந்தார். பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணம்தான். கணவரின் கருத்துக்கேற்ப வாழவேண்டுமென்றாலும், ஒரு நாத்திகக் கணவரின் பொது வாழ்க்கையில் இணைந்து செயல்படுவது அவ்வளவு எளிதாக இருக்காது. ஆனால், இராணி அம்மையாரோ குடும்ப வாழ்வில் மட்டுமின்றி, பொது வாழ்விலும் அண்ணாவின் இணையராகப் பயணித்தார். எப்போதும் பொதுக்கூட்டம், போராட்டம், சிறைவாசம் என்பதை வழக்கமாகிக் கொண்ட தந்தை பெரியாரின் 'சுவீகார புத்திரனா'கவே வாழ்ந்து கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா, இராணி அம்மையாரையும் தன் வழிக்குப் பழக்கிவிட்டார்.

### வாழ்த்துக் கடிதம்

இராணி அம்மையாரின் கொள்கை உரம் எத்தகையது என்றால், 1938 ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, பேரறிஞர் அண்ணாவுக்கு நான்கு மாதம் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. அந்தச் செய்தி வெளியான 02.10.1938 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் அண்ணாவை வாழ்த்தி, இராணி அம்மையார் எழுதிய வழியனுப்புக் கடிதமும் வெளியிடப்பட்டது.

"வீரத்தலைவரே...! சுகமாய்ப் போய்வாரும்...!

அண்ணாதுரைக்கு மனைவியார் வாழ்த்து

அன்புமிக்கத் தலைவரே! தங்களுக்கு இன்று முதல் நான்கு மாதம், கட்டாய இந்தி கூடாதென்று பேசியதற்காக காங்கிரஸ் அரசாங்கத்தார் சிறைதண்டனை அளித்ததை மகிழ்வுடன் ஏற்றுச் சிறைக்குச் சென்ற தங்கள் வீரத்தைப் பாராட்டுவதுடன், தங்களை வாழ்க்கைத் துணையாக, யான் பெற்ற செல்வம் இன்றுதான் பெற்றேன். தாங்கள் தமிழ்த்தாயின் தவப்புதல்வரென்ற பேற்றை இன்றுதான் பெற்றீர்கள். தங்கள் வீரத்தையும், தமிழ்த் தொண்டினையும் தமிழ்நாடு என்றும் மறக்காது. தமிழ்த்தாய் தங்கள் பக்கம் நின்று காப்பாள். வீரத்துடன் சிறைசென்று வருக.

இப்படிக்கு,
தங்கள் வாழ்க்கைத் துணைவி
ராணியம்மாள்"

மேலும், அண்ணா அவர்கள் சிறைச்சாலையில் இருந்தபோது அவரைப் பார்க்கச் சென்ற இராணி அம்மையாருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதையும் ஏற்றுக்கொண்டார்.

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் பங்கேற்றவர்களில் இராணி அம்மையாரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**1996 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி இறக்கும்வரை ராணி அம்மையார், திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பங்களின் தாயாகப் போற்றப்பட்டார்.**

1957 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டது. அப்போது இராணி அம்மையார் தன்னோடு மகளிர் மன்றத் தோழர்களை இணைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்தார். ஆயினும், அண்ணா அவர்களின் தோல்வி இராணி அம்மையாரை மனம் வருந்தச் செய்தது. மீண்டும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் அண்ணா அவர்கள் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைச்சாலையில் இருந்தபோது அவரிடம் தனியாகப் பேசக்கூட வாய்ப்பற்ற நிலையில் இயக்கத் தலைவர்களோடு சேர்ந்துதான் அண்ணாவைப் பார்த்தார். 22.05.1964 அன்று அண்ணாவைக் காண இராணி அம்மையார் குடும்பத்துடன் சிறைச்சாலைக்குச் சென்று அண்ணாவைப் பார்க்க அனுமதியின்றித் திரும்பிச் சென்ற நிகழ்வை பேரறிஞர் அண்ணா பதிவு செய்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று 06.03.1967 அன்று அண்ணா அவர்கள் முதல்வர் பதவியேற்றபோது இராணி அம்மையாரைத் தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை. தானாகவே குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு பதவி ஏற்பு விழா மண்டபத்துக்குச் சென்று அந்தக் காட்சியைக் கண்டார் இராணி அம்மையார். ஆனால், அதைப் பற்றியும் அவருக்கு வருத்தம் இல்லை. தமிழ்நாட்டின் வரலாற்றில் இடி விழுந்ததுபோல் ஏற்பட்ட பேரறிஞர் அண்ணாவின் மறைவு இராணி அம்மையாரை எப்படித் தாக்கியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

### மேலவை உறுப்பினர்

அண்ணாவின் மறைவுக்குப் பின் இராணி அம்மையார் தொடர்ந்து பொது வாழ்விலும் இயக்கத்தின் செயல்பாட்டிலும், ஈடுபாட்டுடன் இருக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த கலைஞர் அவர்கள் இராணி அண்ணாதுரை அம்மையாரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவியேற்கச் செய்தார். 1996 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி இறக்கும்வரை ராணி அம்மையார், திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பங்களின் தாயாகப் போற்றப்பட்டார்.

1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றத் தொடக்க விழாவில், இராணி அண்ணாதுரை அம்மையார் ஆற்றிய உரை இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

"மகளிர் மன்றம் என்றதும் பலருக்கு-அதிலும் ஆண்களுக்கு, ஏன் இந்த மன்றம்? என்று தோன்றலாம். பெண்களில் சிலர்கூட, மகளிர் மன்றம் என்று ஒன்று வேண்டுமா? என்று கேட்கக்கூடும். சென்னை போன்ற இடங்களில் -அதுவும் மயிலாப்பூர், மாம்பலம் போன்ற இடங்களில் உள்ள லேடீஸ் கிளப்பைப் போன்றது அல்ல.

நாம் ஆரம்பித்திருக்கும் மகளிர் மன்றம் நாமும் நமது குடும்பத்தாரும் நாடும் நன்றாக வாழ்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு பாடுபடும். மூடநம்பிக்கைகளை மாற்றி, நல்ல கருத்துக்களை எங்கும் பரப்புவதற்கு பாடுபடும்.

### உரிமைகள் ஏட்டளவில்தானே:

நமது நாட்டில் பெண்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. சமநீதி, சமவுரிமை என்று ஏட்டளவில் பலர் எழுதினாலும்கூட பெண்களுக்கு உரிமையானவைகள் தரப்படவில்லை.

ஒரு குடும்பத்தில் ஆண்களைப் படிக்க வைப்பதில் காட்டும் அக்கறையைப் பெண்களைப் படிக்க வைப்பதில் காட்டுவதில்லை.

பெண்கள் கல்வி விஷயத்தில் தனிப்பட்டவர்களைவிட அரசாங்கம் அதிக ஊக்கம் தரவேண்டும்; அதிக வசதிகள் செய்து தரவேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெண்கள் இலவசமாகப் படிப்பதற்கு அனுமதி தரவேண்டும். வசதியற்ற ஏழை பெண்களுக்குத் தனியாகத் தங்கும் விடுதிகளும், பண உதவிகளும் செய்யவேண்டும். சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், என்பவர்களுக்கு விசேட சலுகைகள் அரசாங்கம் தருவதுபோல் பெண்களுக்கும் விசேட சலுகைகள் தரப்பட வேண்டும். ஏனெனில், சமூகத்தில் பெண்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் பெண்களுக்குத் தனியாக உரிமைகள்-உதவிகள் அளித்து, கல்வித்துறையில் பெண்கள் முன்னேற்றம் அடைய உதவ வேண்டும்." என்று இராணி அண்ணாதுரை அம்மையார் 1956 ஆம் ஆண்டு மகளிர் மன்றத் தொடக்க விழாவில் எடுத்துக் கூறிய ஒவ்வொரு அறிவுரையையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல்வர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தத் தொடங்கினார்.

தற்போது தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப்பெண் திட்டமும், பல்வேறு பணிகளுக்காக வெளியூருக்குச் செல்லும்பெண்கள் அச்சமின்றித் தங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள 'தோழி' மகளிர் விடுதிகளும் இராணி அம்மையார் அறிவுரையின் தொடர்ச்சியாகவே விளங்குகின்றன, என்பதே இராணி அண்ணாதுரை என்ற திராவிடப் போராளியின் சுவடுகளைப் பேசும் செய்திகளாகும்.

(வருவார்கள்...)

---

## அதானி லாபத்துக்கு அரசு ஆய்வுகள் பலி?

ஒன்றிய அரசு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான நிதியை 1.2%, சுகாதார ஆய்வுகளுக்கான நிதியை 0.7% மட்டுமே அதிகரித்திருக்கிறது. உயிரித் தொழில்நுட்பத் துறைக்கான நிதியை 16% குறைத்திருக்கிறது.

ஆனால், உயிரித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் தனியார் ஆய்வுகளை அதிகரிக்க ரூ.1 லட்சம் கோடி நிதியிலான திட்டத்தை அறிவித்திருக்கிறார் நிர்மலா சீதாராமன்.

ஹிண்டன்பர்க் அறிக்கைக்குப் பிறகு அதானி குழுமத்தின் மதிப்பு 150 பில்லியன் டாலர் அளவுக்குச் சரிந்திருக்கிறது.

இழப்பில் இருந்து மீள பல வழிகளிலும் முயற்சித்துக் கொண்டிருக்கும் அதானி குழுமம், அதானி கிரீன் எனர்ஜியின் மின்னுற்பத்தித் திறனை அடுத்த 6 ஆண்டுகளுக்குள் 45 கிகா வாட்களாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்திருக்கிறது. 8 வங்கிகளிடம் கடன் திரட்டும் முயற்சியிலும் அந்நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் தனியார் ஆய்வுகளை அதிகரிக்க, ஒன்றிய அரசு காட்டும் ஆர்வத்தையும், அதானி குழுமம் அந்தத் துறையில் தனது பாதையை விரிவுபடுத்த மேற்கொள்ளும் முயற்சிகளையும் தொடர்புப்படுத்தி உற்றுநோக்க வேண்டியது அவசியமாகிறது.

---

## :ப்ளாஷ்பேக்





அய்யப்பன்

### பேச்சுப் போட்டி பரிசு!

2009-ஆம் ஆண்டுப் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு, திருவாரூரில் மாவட்டக் கழகம் சார்பாக பேச்சுப் போட்டி நடைபெற்றது. அப்போது துணை முதலமைச்சராக இருந்த தளபதி அவர்கள் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் விழாவுக்கு வருகை தந்தார். என் தங்கை ஆர்.சிவசங்கரி அவர்கள் திருவாரூர் மாவட்ட அளவில் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்காகப் பாராட்டுச் சான்றிதழும், ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையும் தலைவர் கைகளில் பெற்றார். அவருடன் நானும், எங்கள் தாயார் ஆர்.சத்யா ஆகியோரும் உடனிருந்தோம். மேடையில் கழக முன்னோடிகள் டி.கே.ஜி.நீலமேகம், எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-ஆர்.அய்யப்பன், பந்தநல்லூர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


**கருவூலம்**

## இந்தி எதிர்ப்பில் கலைஞரின் உறுதி!

**1952-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான இந்தி எதிர்ப்பு ஊர்வலம், திருச்சி தெப்பக்குளம் பகுதி அஞ்சல் நிலையத்தை வந்தடைந்தது. எட்டாத உயரத்தில் சரிவான ஓட்டுக் கூரையின் உச்சியில் இந்திப் பெயர்ப்பலகை. இருவரைக் குனிய வைத்து, கூரையின் மேலே ஏறினார் கலைஞர். சரிவில் மெல்லத் தவழ்ந்து இந்தியை அழித்தார்.அதே நாள், தந்தை பெரியாரும் அங்கு போராட்டத்தில் இருந்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 381




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.